விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 111 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 26 ஞாயிற்றுக்கிழமை (09.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## நாடு எழுச்சி பெற்றுள்ளது
### எஸ்.பி திஸாநாயக்க

(கொழும்பு)
நாடு மீண்டும் எழுச்சி பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
வெளிமடை பகுதியில் மக்கள் சந்திப்பில், ஈடுபட்ட சந்தர்ப்பத்திலேயே அவர் இதனைத் தெரிவித் 19

## சைவத்துக்கு ஏற்பட்ட அவலத்தால் சர்வமதக் குழுவிலிருந்து விலகுகின்றோம்
### அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை

(யாழ்ப்பாணம்)
இலங்கையில் சைவ சமயத்துக்கு ஏற்பட்ட அவல நிலை காரணமாக சர்வமதக் குழுவிலிருந்து விலகுகின்றோம் என அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை அறிவித்துள்ளது.
இது தொடர்பில் குறித்த சபையால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில்,
எமது நாட்டில் சைவ சமயத்துக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை காரணமாக அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை பிரதிநிதிகள் ஆகிய நாங்கள் சர்வமதக் குழுக்களிலிருந்து உடனடியாக வெளியேறுகின்றோம்.
இதேபோன்று இலங்கை பூராகவும் 19




# தமிழர் தேசத்தில் சிங்கள ஆதிக்கம்
### படகு பயணக் கட்டணச்சீட்டில் நயினாதீவின் பெயர் நீக்கம்

*(யாழ்ப்பாணம்)*
யாழ்ப்பாணம் - குறிகாட்டுவான் பகுதியில் இருந்து நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயிலுக்கு செல்லும் படகு பயணக் கட்டணச் சீட்டில் நயினாதீவு எனும் பெயர் நீக்கப்பட்டுள்ளது.
*(19ஆம் பக்கம் பார்க்க)*




## அச்சுவேலி நவக்கிரியில் கஞ்சாவுடன் பெண் உட்பட இருவர் கைது

(யாழ்ப்பாணம்)
அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவக்கிரி பகுதியில் வைத்து, குப்பிளான் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்று கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது கஞ்சாவினை விற்பனை செய்த 19


## பள்ளிவாசலில் மோதல்; ஒருவர் உயிரிழப்பு

(அம்பாறை)
அம்பாறை - சம்மாந்துறையில் பள்ளிவாசல் ஒன்றின் நிர்வாக தெரிவுக்கான ஆலோசனை கூட்டம் ஒன்றின் பின் இடம்பெற்ற முறுகலில் ஒருவர் பலியானதுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட செந்நெல் 19

## தமிழின அழிப்புக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் இன்று கலந்துரையாடல்

(வவுனியா)
தமிழின அழிப்புக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து வவுனியாவில் இன்று கலந்துரையாடவுள்ளன.
வவுனியாவில் சமகால அரசியல் நடவடிக்கைகளை ஒன்றிணைந்து எதிர்கொள்வதற்கான கட்டமைப்பை உருவாக்கும் முகமாக வவுனியாவில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகளுக்கான ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. 19

## யாழிலிருந்து 114 ஆடுகள் புத்தளத்துக்கு கடத்த முயற்சி


06

## சீனாவின் உதவிக்கு நன்றி தெரிவித்த மகிந்த

(கொழும்பு)
சீனா தொடர்ந்து செய்து வரும் மதிப்புமிக்க உதவிகளுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கான சீனத்தூதுவர்சீசென்ஹொங் மற்றும் முன்னாள் 19



## அல்வாயில் வீதி விபத்து
### மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
அல்வாய் நாவலடி பகுதியில் நேற்றிரவு இரு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மூன்று பேர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் பருத்தித்துறை 19

### சிங்கள பௌத்த பேரினவாதம்
## எதைச் செய்தாலும் ரணில் மௌனமாக இருப்பார்
### சிறீதரன் எம்.பி விசனம்

(கிளிநொச்சி)
சிங்கள பௌத்த பேரினவாதம் எதைச் செய்தாலும் ஜனாதிபதி ரணில் மௌனமாகத்தான் இருப்பார் என பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விசனம் வெளியிட்டுள்ளார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



## பொதுக்கூட்டமும் திருப்பணி வேலைகள் சம்பந்தமான கலந்துரையாடலும்

## கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் A9 வீதி கிளிநொச்சி

எமது ஆலய பொதுக்கூட்டமும் ஆலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருப்பணி வேலைகள் சம்பந்தமான கலந்துரையாடலும் எதிர்வரும் 11.04.2023ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலயமண்டபத்தில் நடைபெற இறையருள் கைகூடியுள்ளது. சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு எல்லாம் வல்ல முருகப் பெருமான் திருவருளோடு கேட்டுக் கொள்கின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

(1) தேவாரம்
(2) ஆலய பிரதம குரு உரை
(3) ஏனைய சமயப் பெரியார் உரை
(4) தலைமை உரை
(5) செயலாளரின் சென்ற வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
(6) வருடாந்த கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
(7) கணக்காய்வாளரின் கருத்துரை
(8) ஏனைய விடயங்கள்
1. ஆலயத்தில் நடைபெறும் திருப்பணி வேலைகள் சம்பந்தமான கலந்துரையாடல்
(9) கிராம அலுவலரின் உரை
(10) கலாசார உத்தியோகத்தர் உரை
(11) நன்றியுரை - செயலாளர்
(12) தேவாரம்

தயவுசெய்து இந் நிகழ்வில் கலந்து தங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கி உதவவும்.

குறிப்பு - அனைவரது நேரத்தையும் கருத்தில் கொண்டு குறித்த நேரத்திற்கு சமூகமளிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

நன்றி

ஆலய பரிபாலன சபை சார்பில்

| ச.ஸ்ரீகௌரிபாலா | மா. சிவராசா | சு.வரதராசா |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

(C-6321)

# பயங்கரவாத சட்டத்துக்கு பதிலாக ஊழல் ஒழிப்பு சட்டத்தை கொண்டு வருவோம் - சஜித்

பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாக ஊழல் ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வருவோம் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டமூலத்தை அன்றி ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தையே அரசாங்கம் துரிதமாக கொண்டு வர வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இதன் மூலம் பண்டோரா பத்திரங்கள் ஊடாக அம்பலப்படுத்தப்பட்ட ஊழல் வாதிகள் மற்றும் கடந்த காலங்களில் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த முடியும் என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு குறித்த சட்டமூலத்தைக்கொண்டுவருதன் மூலம் ஊழல்வாதிகளை உரிய முறையில் தண்டிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் தற்போது அரசாங்கம் ஊழல்வாதிகளை பாதுகாக்கும் சட்டமூலத்தையே கொண்டுவர முனைவதாகவும் அதன் ஊடாக தமது உற்ற ஊழல்வாதி கூட்டாளிகளை அரசாங்கம் பாதுகாப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(ம-7.9)


## தையல் பணியாளர் தேவை

யாழ் நகரில் உள்ள பெண்களுக்கான தையல் கடைக்கு (கட்டிங் மற்றும் தையல் தெரிந்த பெண் ஊழியர்கள் தேவை) (15188)

077 334 7766
076 162 9517

## ஜெயக்குமார் திருமண சேவை

1990,1985 சூரியன் செவ்வாய் ஜேர்மன் (மணமகன்) படித்த மணமகள் தேவை, மற்றும் உங்கள் கலாசாரத்திற்கு அமைய ஐரோப்பா கனடா அவுஸ்ரேலியா அமெரிக்காவில் மணமக்கள் ஒழுங்கு செய்துதருவோம்.

WhatsApp: 004917643399372
0094 764 75 2219
0094 765 59 0349
(15176)

## வேலை வாய்ப்பு


பரந்தனில் இயங்கும் களஞ்சியசாலைக்கு களஞ்சிய பொறுப்பாளர், பட்டா சாரதி தேவை. பரந்தனை சார்ந்து இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (15192)

தொடர்புகளுக்கு:
077 711 0329
077 245 4224


# மரண அறிவித்தல்

'நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்' (II தீமோத்தேயு 4:7)

தோற்றம்
24 - 06 - 1944



மறைவு
07 - 04 - 2023

'கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்கள் பாக்கியவான்கள்'

## திரு.கந்தையா இராசநாயகம்

**(அகில இலங்கை சமாதான நீதிவான், முன்னாள் நல்லூர் மத்திய சபை உறுப்பினர், கலைக்குயில், கலாபூசணம், இசை வாத்திய கருவி தயாரிப்பாளர், இசைக் கலைஞர்)**

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசநாயகம் அவர்கள் 07.04.2023 அன்று காலமானார்.

அன்னார் அமரர்களான கந்தையா - நாகமுத்து தம்பதியினரின் மூத்த புதல்வனும் அமரர் வர்ணேஸ்வரியின் அன்புக் கணவரும் அமரர்களான இந்துராணி, இராசரட்ணம், இராசலட்சுமி மற்றும் இராஜேஸ்வரி, இராசராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர்களான அந்தோனிப்பிள்ளை, சபாரத்தினம், இராஜதுரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 09.04.2023 இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணியளவில் சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று கோப்பாய் கானான் ஜெப ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (15190)

தகவல்: குடும்பத்தினர்
077 132 0331

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 12.03.2023 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு

## அமரர் இராசதுரை குமரேஸ்வரன் (சூட்டி)

(கிருஷ்ணா கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை 10.04.2023 திங்கட்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். நாளைமறுநாள் 11.04.2023 செவ்வாய்க்கிழமை நண்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவு செய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நன்றி

கிழக்கு, அத்தாய்.

(C-6322)

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டை முன்னிட்டு உச்சம் தொட்ட முந்திரி விலை

(கொழும்பு)

புத்தாண்டுக் காலத்தை முன்னிட்டு முந்திரிக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக முந்திரி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தற்போது முந்திரிக்கு அதிக கேள்வி நிலவுவதால் தேவைக்கேற்ப அதன் கொள்ளளவை வழங்க முடியாத நிலை இருப்பதாக முந்திரி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்நாட்களில் உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட விற்பனை நிலையங்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு மெற்றிக் தொன் முந்திரிதேவை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தனியார் விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ முந்திரி 4000-5000 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

ஆனால் முந்திரி கூட்டுத்தாபனத்தால் ஒரு கிலோ முந்திரி 3000 முதல் 3500 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

மேலும் சில பகுதிகளில் உடைந்த முந்திரி துகள்களை பல வகையான பசைகளை பயன்படுத்தி ஒட்டப்பட்டு முழு முந்தியாக விற்பனை செய்வதால் உயர்ரக முந்திரி விற்பனை வீழ்ச்சி அடைவதாக முந்திரி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (நி)

# இதுவரை 80 வீதமான சீருடைகள் விநியோகம்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான 80% சீருடைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மீதமுள்ள 20% இந்த மாத இறுதிக்குள் விநியோகிக்கப்படும் என அதன் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முற்கட்டமாக சீனாவில் இருந்து பெறப்பட்ட சீருடைகள் வடக்கு, கிழக்கு மத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. (நி)


## VACANCIES
## @ APSS International

- **IELTS Lecturer**
  A Bachelor's Degree in the English language.
  At least 2 years of Experience in designing and Delivering quality IELTS classes.
- **Advanced Level – Teacher**
  English language / Sinhala (Second Language)
- **Secondary Level Gr.6-11 Teacher**
  English language / Sinhala (Second Language)
- **Spoken and Written**
  English language / Sinhala Language

Applicants should possess a Language certification from a recognized University / Institution or possess past experience in delivering language classes. (15187)

Whats app your C.V to 077-2306642 or
Email: chelvanbose@hotmail.com



## VACANCIES
## @ APSS International

**Receptionist cum administrative Assistant**
Minimum A/L Qualification.
Good communication Skills in English & Tamil

**Lecturers**
- **Graphic Designing Course.**
  NVQ or Ad. Diploma or Bachelor's Degree in Graphic Designer.
- **Web Designing Course.**
  NVQ or Ad. Diploma or Bachelor's Degree in Web Designer or related field.
- **Mobile Phone Technician.**
  NVQ or equivalent Qualification from recognized Institution

(15187)

Whats app your C.V to 077-2306642 or
Email: chelvanbose@hotmail.com


# இலங்கை மக்கள் இன, மத வேறுபாடுகளைக் கடந்து சுபீட்சமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப வேண்டும்

## யாழ்.மறைமாவட்ட ஆயர்



(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்கள் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவை இன்று கொண்டாடுகின்றனர். இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் கொண்டாடும் மக்கள் அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றோம் என யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் - சிங்கள புத்தாண்டை கொண்டாடும் மக்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்

இலங்கை நாடு இன்று என்றுமில்லாத ஒரு இக்கட்டான காலகட்டத்தில் உள்ளது. இலங்கை வாழ் மக்கள் அனைவரும் பல துன்பங்களையும் நெருக்கடிகளையும் அன்றாடம் எதிர்நோக்கி மனம் சோர்ந்து போயுள்ளனர். இருப்பினும் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவுடன் நம்பிக்கையின் ஒளிக்கீற்றுக்கள் தென்படத் தொடங்கியுள்ளன என சற்று ஆறுதல் படலாம்.

இலங்கை நாடு பழைய நிலைக்குத் திரும்ப பல ஆண்டுகளாகும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர் என்பதை நாம் எல்லோரும் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

இலங்கையின் இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டால்தான் இலங்கை நாடு சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி நகர முடியும் என்று தமிழ் மக்கள் போராடியும் வாதாடியும் நீண்ட காலமாக கேட்டு வந்த உண்மையை இன்று பல சிங்களத் தலைவர்களும் சிங்கள மக்களும் ஓரளவு உணரத் தொடங்கியுள்னர். இந்த நிலையைச் சாதகமாக்கி இனியும் காலம் கடத்தாது செயற்பட வேண்டும்.

இலங்கை வாழ் சிங்கள,தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் இன, மத, மொழி மற்றும் வேறுபாடுகளை மறந்து இலங்கைத் தாயின் மக்களாக அன்புடனும் புரிந்துணர்வுடனும் வாழவும் சுபீட்சமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பவும் சம்பந்தப்பட்ட அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டுமென இலங்கை மக்கள் அனைவர் பேராலும் அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

எமது இன்றைய அவசர உடனடித் தேவையாக் இருப்பது இன்றைய நிலையை வேகமாகச் சரி செய்து நாட்டை மேலும் அழிவு நிலைக்குக் கொண்டு செல்லாது பாதுகாப்பதாகும்.

இலங்கை நாட்டு அரசியல்வாதிகளும் அரச தரப்பினரும் அரச பணியாளரும் இலங்கை நாட்டு நலனில் அதிக அக்கறை கொண்டு மக்களினதும் மண்ணினதும் சுபீட்சமான எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு இக்காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# கால்நடை தீவன வரியை நீக்கினால் முட்டை விலையை குறைக்கலாம்

## கோழிப் பண்ணையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

முட்டை ஒன்றின் விலையை 6 ரூபாவால் குறைக்க முடியும் என அகில இலங்கை கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கால்நடை தீவனத்துக்கு விதிக்கப்படும் வற் வரியை நீக்கினால் முட்டையின் விலையை 6 ரூபாவினால் குறைக்க முடியும் என சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

வற் வரி நீக்கப்பட்டால் எதிர்காலத்தில் முட்டைகளை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமில்லை எனவும் வற் வரி நீக்கப்பட்டால், உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கும் என்பதுடன் உள்ளூர் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும் எனவும் அஜித் குணசேகர தெரிவித்தார். (நி)

# புத்தாண்டின் பின்னர் அமைச்சரவையில் மாற்றம்?

(கொழும்பு)

புத்தாண்டின் பின்னர் புதிய அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சரவை மாற்றத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பத்து உறுப்பினர்களுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன மற்றும் பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த சுயேட்சை உறுப்பினர் ஒருவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குவது தொடர்பில் இன்னும் இறுதி இணக்கப்பாடு எட்டப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (நி)

# மருந்துகளின் தரம், பாதுகாப்பு குறித்து சந்தேகம்

(கொழும்பு)

இந்திய கடன் சலுகையின் கீழ் கொள்வனவு செய்யப்படும் மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் செயற்றிறன் குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தது.

இரண்டு இந்திய தனியார் நிறுவனங்களிடமிருந்து மருந்துவப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சர்கள், அமைச்சரவை, சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சு மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு ஆகியன எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராகவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (நி)

# சமூக வலைத்தளங்களில் கருத்து தெரிவித்தால் இராணுவத்தால் கைது செய்யப்படும் அபாயம்

## மக்கள் விடுதலை முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் ஊடாக மக்களின் ஜனநாயக உரிமை மீறப்படும் அதே நேரம் அரசுக்கு எதிராக கருத்துக்களை தெரிவிக்க முடியாத நிலையும் ஏற்படும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மக்களை கடும் அடக்குமுறைக்குத் தள்ளிவிடுவதற்கு ஜனாதிபதிக்கு இச்சட்டம் மூலம் அதிகாரம் வழங்கும் என்பதால் அதனைத் தோற்கடிக்க வேண்டும் என அதன் ஊடகப் பேச்சாளர் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.

இச்சட்ட மூலத்தினால் போராட்டத்தில் ஈடுபடும் சாதாரண விவசாயி முதல் ஊடகவியலாளர்கள் வரை கடும் அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்)
### விலைக்கேள்விக்கான கோரல்

**பழைய மாணவர் சங்க அலுவலகம், பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதிய அலுவலகம் மற்றும் திறன் விருத்தி மையம் அமைத்தல்**

1. கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் (தாய்ச்சங்கம்) பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகமை பெற்ற விலைக்கேள்வியாளரிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக் கேள்வியினை கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் பதிவு செய்யப்பட்டதும் கறுப்பு பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்வியாளர்கள் பழைய மாணவர் சங்க (தாய்ச்சங்கம்) யா/கொக்குவில் இந்துக் கல்லூரி கொக்குவில் என்னும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து மேலதிக விபரங்களையும் கேள்விப்பத்திரங்களையும் 10.04.2023 முதல் 25.04.2023 வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 1.00 மணி வரையான காலப்பகுதியில் மூவாயிரம் (3000) ரூபா மீளளிக்கப்படாத தொகையினை பணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடிய உறையிடப்பட்ட விலைக் கேள்விப்பத்திரங்கள் 25.04.2023ஆம் திகதியன்று பி.ப. 1.00 மணிக்கு முன்பாக தலைவர், பழைய மாணவர் சங்க (தாய்ச்சங்கம்) பெறுகைக்குழு, கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் என்னும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ, ஒப்படைத்தல் வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட விலைக்கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விலைக் கேள்விகள் அவைகள் மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

| கேள்வி அடையாள இல. | வேலை விபரம் | தேவையான தரம் | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|
| | | | | தொகை | தேவைப்படும் காலம் |
| KHC/OSA/Office/2023 | திறன் விருத்தி மையம், பழைய மாணவர் சங்க மற்றும் நம்பிக்கை நிதிய அலுவலக கட்டடம் (Phase) - 01 | C8, C7, C6 | 90 நாட்கள் | 90000 | 3 மாதங்கள் |

செயலாளர்
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)
தொ.பே.இல - 076 446 3205
(15193)

# ஃபிபா கால்பந்து தரவரிசை ஆர்ஜென்டினா மீண்டும் முதலிடம்



உலக கால்பந்து அணிகளின் பட்டியலில் நடப்பு சம்பியன் ஆர்ஜென்டினா அணி மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

கட்டாரில் நடந்த உலகக் கிண்ண கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று ஆர்ஜென் டினா சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.


இதன்மூலம் தரவரிசைப் பட்டியலில் 2 ஆவது இடத் தில் இருந்து ஆர்ஜென்டினா முதல் இடத்தைப் பிடித்துள் ளது.

மூன்றாவது இடத்தில் இருந்த பிரான்ஸ் அணி 2 ஆவது இடத்திற்கு முன்னேறிய நிலையில், முதலிட த்தில் இருந்த பிரேஸில் அணி 3 ஆவது இடத்திற்கு இறங்கியுள்ளது.

அதேபோல் இரண்டாவது இடத்தில் இருந்த பெல்ஜியம் 4 ஆவது இடத்திற்கு இறங்கியுள்ளது. இங்கிலாந்து ஐந்தாவது இடத்திலேயே நீடிக்கிறது.

மேலும் நெதர்லாந்து, குரோஷியா அணிகள் முன்னேற்றம் கண்டுள்ள நிலையில், உலகக் கிண்ணத்தில் விளையாடாத இத்தாலியில் இருந்து 8 ஆவது இடத்திற்கு சரிந்துள்ளது. (ஙி)

# மரண அறிவித்தல்



## திருமதி சின்னமணிப்பிள்ளை இராசரத்தினம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தலைமன்கலட்டி தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னமணிப்பிள்ளை இராசரத்தினம் அவர்கள் (08.04.2023) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்துக்குமாரு - ஆச்சி முத்துப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, மாமாங்கம், மீனாட்சிப்பிள்ளை, கனகரத்தினம், மாணிக்கம், பரமேஸ்வரியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தனனாயகம், குணநாயகம், இராசநாயகம், குணரத்தினம், சரஸ்வதிப்பிள்ளை, இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் மல்லிகாதேவியின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஆறுமுகசாமியின் மாமியாரும் திருமதி கமலினி மணிமாறன், திருமதி கலாஜினி சிவரஞ்சன், திருமதி நந்தினி மாதவன் ஆகியோரின் பேர்த்தியும் சஞ்சனா, துர்க்கவி, யதீசன், மதுசாயினி, ரிதுஷிகன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 09.04.2023 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆனைக்குட்டி மதவடி,
தெல்லிப்பழை.

தகவல் குடும்பத்தினர்
077 413 2516
(C-6324)

# 8வது ஆண்டு நீங்காத நினைவில்

கலைவாரிதி, கலாபூஷணம்
அமரர்
## இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை
(பண்ணாகம், சுளிபுரம்)

### கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.
"இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமாகும்"
பகவான் ஸ்ரீ கிரு...



தாயின் மடியில்
22.09.1944

மண்ணின் மடியில்
08.04.2015

திதி : 09.04.2023

### பொன்னாலை வரதராஜப் பெருமானுக்குத் துதி

பொன்னாலை நாதனே
பொழுதெல்லாம் நின் நினைவே
உன்னாலை தானையா
உலகமே உருளுதப்பா
என்னாளும் உன் நினைவே
உயிர் வாழ நீ துணையே
கண்ணான கண்ணனே
கடைக் கண் பாருமையா...

சில நாள் உனைத் துதித்தால்
வினை எல்லாம் தீருமையா
பல நாளும் பணிகின்றேன்
பாராயோ நீ என்னை
கல கலவென சிரிக்க
பல கதைகள் நான் சொன்னேன்
சீலனே உன் கதைகேட்டு
சிறுத்தையும் பூனையாய்
ஆனதையா...

அதிகாலையில் எழுந்து
மனம் வாடி உனை நினைத்து
இதுதான் என் விதியோ என
ஏங்கி நிதம் தவித்து
கதிதான் நீ என்று
காலமெல்லாம் நினைத்து
விதிதான் இதுவென்றால்
மாற்றிட நீ மாட்டாயோ...

சங்கெடுத்தூதி சண்டையை
மூட்டி விட்டாய்
மாண்டவர் பல பேர்கள்
பாண்டவர் தன் தர்மம்
தழைத்திட வழிசமைத்தாய்
ஆலமுண்ட கண்டனின்
அன்பு மிகு மைத்துனனே
எம் பாவ வினைகள் தீர்க்க
கல்கியாய் வாருமையா...

பொன்னாலை வரதராஜப் பெருமானை நினைத்து கிருஷ்ணதுரை அவர்கள் எழுதிய துதிப் பாடல்.

(C-6323)

...நினைவுடன் வாழும்
...வி, பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாக்குதல் சம்பவங்கள் இனி இடம்பெறாது

## ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம் பெறாத வகையில் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எந்தவொரு செல்வாக்கும் இன்றி தாக்குதல் தொடர்பாக சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்றதாகவும் விசாரணை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் குறுகிய அரசியல் இலக்குகள் மற்றும் பின்தங்கிய போக்குகளிலிருந்து விலகி நாட்டைக் கட்டியெழுப்பும் பொது வேலைத்திட்டத்துடன் அனைவரும் கைகோர்க்க வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார். (நி)

# பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடம் இருந்து சாதகமான பதிலை எதிர்பார்க்கும் கல்வி அமைச்சு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சாதகமான பதிலை வழங்குவார்கள் என எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக, 19 ஆயிரம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனினும், 12 ஆயிரம் மதிப்பீட்டாளர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளதாக கல்வி அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


## பெயர் மாற்றம்

பிரதான வீதி, நாவலடி இளவாலையில் வசிக்கும் அல்போன்ஸ டோன் பொஸ்கோ மரிய செல்வம் அல்போன்ஸ் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை டோன் பொஸ்கோ மரிய செல்வம் எனப் பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே என் சார்ந்த சக்ல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

அ.டோ.மரியசெல்வம் (15186)


# இளைஞர்களிடையே கேட்கும் திறன் குறைவடையும் அபாயம்

## விசேட சத்திரசிகிச்சை மருத்துவர் எச்சரிக்கை

(கொழும்பு)

அதிக ஒலி எழுப்பும் கேட்டல் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம், இளைஞர்கள் மத்தியில் கேட்கும்திறன் குறைவடையும் அபாயம் உள்ளதாக தொண்டை, காது மற்றும் மூக்கு தொடர்பான விசேட சத்திரசிகிச்சை மருத்துவர் சந்ரா ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தும் போது, கேட்டல் கருவிகளைப் பயன்படுத்தியவாறு பாடல்களைக் கேட்கின்றனர்.ஹெட்செட் போன்ற கருவிகளை பயன்படுத்தும் போது ஓசையின் அளவை 60 இற்கும் குறைந்த அளவில் வைத்துக் கொண்டு, ஒரு மணித்தியாலத்திற்கும் குறை ந்த நேரமே செவிமடுக்க வேண்டும் இதனை விடவும் அதிக நேரம் செவிமடுத்தால், காதுக்கு பாதிப்பு ஏற்படும். இந்த செயற்பாடானது முதியவர்களைப்போன்று இளைஞர்களுக்கும், கேட்கும் திறன் குறைவடையச் செய்வதில் தாக்கம் செலுத்தும் என அவர் தெரிவித்தார். (நி)

# வெதுப்பக பொருட்களின் விலைகளை தீர்மானிப்பதில் நுகர்வோர் விவகார அதிகாரசபை தலையிட வேண்டும்

## சட்டத்தரணி சாந்த தெரிவிப்பு

(கொழும்பு)

பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகள், சீமெந்து மற்றும் பால்மா ஆகியவற்றின் விலைகளை தீர்மானிக்கும் விடயத்தில், எதிர்காலத்தில் நுகர்வோர் விவகார அதிகார சபை தலையீடு செய்ய வேண்டி ஏற்படும் என அதன் தலைவர் சட்டத்தரணி சாந்த நிரிஎல்ல தெரிவித்துள்ளார்.

குறித்த தொழிற்துறையை சார்ந்தவர்கள், அவற்றின் விலைகளை குறைக்காமையே இதற்கு காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இணையத்தள முறைமையில் பொருட்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் எதிர்காலத்தில் புதிய ஒழுங்கு விதிகளை அமுலாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தற்போது அந்தப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி சாந்த நிரிஎல்ல தெரிவித்தார். (நி)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அழிவுக்கே வழிவகுக்கும்

## மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர்கள் திலகர்

(கொழும்பு)

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது அது தமிழர்களுக்கானதாக மட்டுமே பார்க்கப்பட்டது. இன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படும் போதே அது எல்லா மக்களையும் பாதிக்க வல்லது என உணரப்படுகிறது.

எது எவ்வாறாயினும் பயங்கரவாதம் எழாதவாறு அரசாங்கம் நாட்டை நிர்வகிக்க வேண்டுமே அன்றி அதனை எதிர்த்து இயங்கும் சட்டம் வகுப்பது அழிவுக்கே வழிவகுக்கும் என மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் கொண்டுவரவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையைப் பொறுத்தவரையில் சட்டவாட்சி என்பது கடந்த காலங்களில் பாரபட்சம் நிறைந்ததாகவே காணப்பட்டு வந்துள்ளது. இன, மத, மொழி, பிரதேச ரீதியான பேதப் படுத்தல்கள் சட்டவாக்கத்திலே பேணப்பட்டு வந்துள்ளமையை அவதானிக்கலாம்.

இலங்கை சுதந்திரமடைந்ததும் இலங்கை பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்த சுதேச அரசு இந்திய வம்சாவளியினர் இந்த நாட்டின் பிரஜைகள் இல்லை என ஏற்க மறுத்தது. சட்டம் இயற்றல் மூலமாக மலையகத் தமிழ் இனத்திற்கு ஏற்படுத்தப்பட்ட பாரபட்சம் காரணமாக இன்னமும் மீள எழும்ப முடியாத இனமாக அவர்கள் வைக்கப்பட்டுள்ளார்கள். அதே வடக்கு - கிழக்குப் பகுதிகள் சார்ந்து எழுந்த உள்நாட்டு போரை மையப்படுத்தி பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டதால் அதிக மான வடக்கு - கிழக்கு தமிழ் இளைஞர், யுவதிகளுடன் மலையகத் தமிழரும் பாதிப்புக்குள்ளாகினர்.

இந்த நிலையிலேயே இன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இலங்கையின் எல்லா மக்களையும் பாதிக்கக் கூடிய சட்டமாக, பெரும்பான்மை சிங்கள மக்களாலும் கூட ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நிலை காணப்படுகிறது என அவர் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

09.04.2023
பங்குனி 26, ஞாயிற்றுக்கிழமை
திருதியை முற்பகல் 9.47 மணிவரை
விசாகம் பிற்பகல் 2.07 மணிவரை

சுபநேரம் 9.07-10.37 மணிவரை
இராகுகாலம் 4.37-6.07 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்த,
உயிர்ப்பு ஞாயிறு

சந்திராஷ்டமம் - அச்சுவினி, பரணி

வளவன்


**மேஷம்**: தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


**கடகம்**: மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பெற்றோர் மீதான பாசம் கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.


**துலாம்**: பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எதிர்பாராத தனவரவுகள் இடம் பெறலாம், உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.


**மகரம்**: இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.


**ரிஷபம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.


**சிம்மம்**: உறவினர் வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.


**விருச்சிகம்**: குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், வழிபாடு குதூகலம் தரும், போசன சுகமுண்டு.


**கும்பம்**: பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.


**மிதுனம்**: வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், உடல் நலம் சீராகும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.


**கன்னி**: ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.


**தனுசு**: திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.


**மீனம்**: சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

பண்புடனும் மரியாதையுடனும் இருப்பவன் உலகில் எதையும் சாதித்து விடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் இருந்து புத்தளத்திற்கு கடத்தப்பட்ட 114 ஆடுகள்

## சாவகச்சேரி பொலிஸாரால் முறியடிப்பு



(சாவகச்சேரி)

யாழ்ப்பாணத்தில் இருந்து புத்தளத்திற்கு கடத்தப்பட்ட 114 ஆடுகளை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மீட்டுள்ளனர்.

ஏ9 வீதி ஊடாக கனரக வாகனத்தில் புத்தளம் பகுதிக்கு ஆடுகளை கொண்டு சென்ற வேளையில் மீசாலை பகுதியில் வைத்து குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது மூடிய கனரக வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 112 மறி ஆடுகளும் 2 கடாய் ஆடுகளும் பொலிஸாரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதுடன், வாகன சாரதி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையில் இரு தினங்களுக்கு முன்பாக 23 கால்நடைகள் மீட்கப்பட்டிருந்த நிலையில் குறித்த கடத்தல் சம்பவமும் முறியடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மீட்கப்பட்ட ஆடுகளை பராமரிப்பதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-30-33)

## யாழ்.சிறைச்சாலையில் நூலகம் திறப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கென நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.நேற்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா இதனைத் திறந்து வைத்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் நூலகர் ஶ்ரீகாந்தலக்சுமி அருளானந்தம் சிவநேசன் குடும்பத்தினரால் சம்பிரதாய பூர்வமாக நூல்கள் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகரிடம் வழங்கி வைக்கப்பட்டது. இந்நூலகம் தொடர்ச்சியாக இயங்குவதற்கான முழுமையான பங்களிப்பையும் பராமரிப்பு, ஆலோசனைகளையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் வழங்கவுள்ளது. (நி-33)

## மாணவர் கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் 2022 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் மாலதி சுப்பிரமணியம் அரங்கில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் தி.ஜோண்குயின்ரஸ்,யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (நி)



உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் "கல்விக்கு குரல் கொடுப்போம் கற்றலை மேம்படுத்துவோம்" என்னும் திட்டத்தின் கீழ் தெரிந்து எடுத்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் வழங்கி வைத்தார்.

## சாவகச்சேரியில் லஞ்சம் வாங்க மறுத்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு சன்மானம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் குற்றச் செயலில் ஈடுபட்ட ஒருவர் லஞ்சமாக கொடுத்த ஐம்பதாயிரம் ரூபாய் பணத்தினை பெற மறுத்து தன் கடமையை சரிவர புரிந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு சன்மானம் வழங்கப்பட உள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து சட்ட விரோதமாக கடத்திச் செல்லப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆடுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கைது செய்யப்பட்டவர் கடமையில் இருந்த பொலிஸ் சாஜனுக்கு 50 ஆயிரம் ரூபாய் பணத்தினை லஞ்சமாக வழங்கி தப்பிக்க முற்பட்ட போதிலும் குற்றச்செயலுடன் தொடர்புடையவர் லஞ்சமாக கொடுத்த பணத்தினை வாங்க மறுத்த சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் சாஜன் தர பொலிஸ் உத்தியோகத்தருக்கு மதிப்பளித்து சன்மானம் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். (நி-33)




பருத்தித்துறையில் அமைந்துள்ள யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி கடந்த 31 ஆம் திகதி பாடசாலையின் அதிபர் கனகராசாசிவதாஸ் தலைமையில் பாடசாலை மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை உடுவில் பிரதேசத்தில், வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு வாழ்வாதார உதவியாக பசு மாடு ஒன்று வழங்கி வைக்கப்பட்டது. (படம்- சுபேசன்)

## 'சோபகிருது' வருடப்பிறப்பு உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கலட்டி ஶ்ரீ வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தானத்தில் சோபகிருது வருடப்பிறப்பு உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நண்பகல் 12.45 மணிக்குப் பின்னர் ஸ்நபன அபிஷேகம் ஆரம்பமாகி வருடப்பிறப்பு நேரமாகிய பிற்பகல் 2 மணி 3 நிமிடமளவில் மூலமூர்த்திக்கு விசேட பூஜையுடன் வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார்.

அத்துடன் 13 ஆம் திகதி மாலை 4 மணிக்குப் பின்னர் மருத்துநீர் வழங்கப்படும் எனவும் பிரதமக் குருக்கள் சிவஶ்ரீ.து. விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி)

## சிவதீட்சை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிவதீட்சை வழங்கப்படவுள்ளது.

வடமாகாணத்தில் சிவ குருநாதபீடம்(வேதாந்த மடம் சமாதி கோயில்), குமாரசுவாமி வீதி. (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக), கிழக்கு மாகாணத்தில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் ஆகிய இடங்களில் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மு.ப.9 மணிக்கு தீட்சா குருக்கள் சைவாகம பூசணம் சிவஶ்ரீ.இ.குமார சுவாமிக்குருக்கள், (பிரதமகுரு, வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் தேவஸ்தானம், வரணி ஆதீனம்.) சிவஶ்ரீ சச்சிதானந்தக் குருக்கள் ஆகியோரால் வழங்கப்படவுள்ளது.

தீட்சை பெறுவோர் சைவ கலாசாரமாக உடை அணிந்து சிறிய செம்பு , கரண்டி, தாம்பாளம்,பூக்கள் ,குருதட்சணை எடுத்து வருதல் வேண்டும்

தீட்சை அன்று உபதேச பயிற்சி வழங்கப்பட்டு உருத்திராட்சம் அணிவிக்கப்படும். அத்துடன் சங்கத்தினால் நித்திய கரும விதிப் புத்தகமும் சிவதீட்சை சான்றிதழும் வழங்கப்படும். அத்துடன் மகேஸ்வரபூசை (அன்னதானம்) வழங்கப்படும். சைவப்புலவர் சங்கப் பரீட்சை எடுக்காத வேறு எவரும் பங்குபற்ற முடியும்.

வடமாகணத்தில் தீட்சை பெற விரும்புபவர்கள் தங்கள் பெயர்களை 077 719 7067, 077 977 3538 ஆகிய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு சைவப்பு லவர் சங்கச் செயலாளர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (நி-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 392

Viber 076 636 3378



# இந்து மத அழிப்பும் இந்தியாவின் பாராமுகமும்!

**இலங்கையில் போர் நிறைவுற்றுவிட்ட நிலையில் தமிழினத்தின் பூர்வீகங்களைக் கொண்ட இந்துமத சின்னங்களை ஆக்கிரமித்து அதனூடாக பௌத்தத்தை நிலை நிறுத்தும் செயலை ஏற்றுக் கொள்ள முடியாது.**

• அபிமன்யு

மதங்கள் மனிதனை நல்லவழிப்படுத்தும் மார்க்கமே அன்றி அவை மனிதர்களை மிருகங்களாக மாற்ற வல்லது அன்று.

மதங்கள் அனைத்தும் அன்பை மாத்திரமே போதிக்கின்றன.அன்பொன்றே இறைவன் என்பதே ஒவ்வொரு மதத்தினதும் கோட்பாடாய் அமைந்திருக்கின்றன.

ஆயினும் மதங்களை; ஆக்கிரமிக்கும் கருவியாக்கி அதனூடே மற்றைய இனங்களின் இன-மத-கலாசாரங்களை அழித்தொழிப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதான ஒன்றல்ல.

இது ஒரு நாட்டிற்கு மட்டுமல்ல ஒட்டு மொத்த உலகிற்கும் பொதுவானது என்பது தான் தர்மம்.

இலங்கைத் திருநாடு பல தசாப்தங்களாக யுத்த வெறி கொண்ட பூமியாக இருந்த போதிலும் தற்போது போர் ஓய்ந்து மக்கள் நிம்மதியாய் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் போரின்பின் பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கான நீதி கிடைக்காது காலம் கடத்தப்பட்டுக் கொண்டிருப்பது ஒரு புறம் இருந்தாலும் போரின் பின் இலங்கையில் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏதும் இல்லை.இறுதிப் போரில் இன அழிப்பேதும் நடக்க வில்லை என சர்வதேசத்திற்கு காட்ட முனையும் பேரினவாத அரசுகளுக்கு சர்வதேசமும் தொடர்ந்து அவகாசம் வழங்குவது தான் வேதனை.

இது ஒரு புறமிருக்க, இலங்கையில் சிங்கள பௌத்தத்தை மேலோங்கச் செய்யும் செயற்பாட்டை அரச இயந்திரங்களே மேற் கொள்வதை சர்வதேசமும் சரி இந்தியாவும் சரி கண்டு கொள்ளாமல் இருப்பதைத் தான் ஏன் என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

குருந்தூர் மலை பறிப்பு, வெடுக்குநாறி சிவன் ஆலயம் இடிப்பு இராணுவம் தொல் பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் பௌத்த விகாரைகளை அமைப்பதற்குள் இருக்கும் மத ஆக்கிரமிப்பை எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அதிலும் இந்துக்களின் பூர்வீகமான பலநூறு ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட தொன்மையான இடங்களைத் தெரிவு செய்து அதில் புத்தரை குடி புகுத்த எத்தனிக்கும் செயல் மிகத் தாராளமாக நடந்து கொண்டிருக்கிறது.

அண்மையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிலாவரைக் கிணற்றடியில் புத்தர் சிலை வைத்ததைத் தொடர்ந்து பொது மக்களின் எதிர்ப்பினையடுத்து அச்சிலை அகற்றப்பட்டது.

ஒரு இராணுவ சிப்பாயின் கனவில் வந்த புத்தர் தனக்கு அவ்விடத்தில் சிலை வைக்குமாறு கூறியதாக தெரிவித்தே அவ் விடத்தில் புத்தர் சிலை வைக்கப்பட்டது.




தமிழனின் பூர்வீகங்களை பறித்தெடுக்கும் செயலில் மதங்களைப் பயன்படுத்துவதனூடாக இலங்கை முழுவதும் பௌத்தம் இருந்ததான வரலாற்றை காட்ட முற்படுவதற்குள் இருக்கும் மத ஆக்கிரமிப்பை சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் இந்துக்கள் ஆதிக்குடிகளாக வாழ்ந்தார்கள் என்பதற்கு பல சான்றுகளும் தொல்லியல் நிலைகளும் காணப்படுகின்றன. அவற்றை ஆக்கிரமிப்பதனூடாக சைவத்தை அழிக்கும் செயலை இந்தியாவும் வேடிக்கை பார்ப்பதுதான் இந்துக்களுக்கு பெரும் வியப்பையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்திய-இலங்கை உறவு இதிகாச புராணங்களினூடானது என்பதற்கு மன்னார் இராமர் பாலம் இன்றுவரை சான்று பகிர்ந்து நிற்கிறது.

ஆயினும் சைவத்தை அழிக்கும் அரச இயந்திரங்களின் செயற்பாட்டை தற்போதுவரை இந்திய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது எதனால் என்ற கேள்வி தமிழர்கள் மத்தியில் எழத் தொடங்கிவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்த வெறுப்பின் காரணத்தினால் வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழினம் கொத்துக் கொத்தாய் அழிக்கப்பட்டதை இந்தியா கண்டு கொள்ளவில்லை எனும் கவலை தமிழ் மக்களின் மனங்களில் ஆறாத வடுவாய் பதிந்திருக்கும் இவ்வேளையில் தமிழினத்தின் ஆதி சமயத்தை அழிப்புச் செய்யும் ஆக்கிரமிப்புகளுக்கு கூட இந்தியா செவி சாய்க்காதது ஏன்? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

சீனாவைக் காட்டி இலங்கை இந்தியாவை பயமுறுத்துகிறதா என்ற சிந்தனையும் தமிழினத்தின் மனங்களில் எளத் தொடங்கிவிட்டது.

இலங்கையில் தமிழினத்தின் பூர்வீகங்களுடன் இருந்த இந்து மத அடையாளங்களை அழித்து அதில் பௌத்தத்தை முன்னிறுத்த முனையும் செயலுக்கு எதிராக. தமிழினம் பாரிய எதிர்ப்பை வெளியிட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்தின் அனுமதியின்றி எவரும் வழிபாட்டு சின்னங்களை நிறுவ முடியாது எனத் தெரிவித்திருந்த அடுத்த நாளே 200 வருடங்கள் பழைமை வாய்ந்த திருகோணமலைப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கையில் போர் நிறைவுற்ற நிலையில் தமிழினத்தின் பூர்வீகங்கள் பௌத்தத்தின் திணிப்பினூடாக பறிக்கப்படுகிறது என்பதே உண்மையானது.

நிலை இதுவாக இருக்கையில் இந்து பாரம்பரியத்திற்கு இலங்கையில் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக புலம்பெயர் அமைப்புகள் பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இந்தியாவின் இந்து அமைப்புகள் ஒன்று சேர்ந்து, இலங்கையில் இந்து ஆலயங்களை அழிக்கும் சக்திகளுக்கு எதிராக இந்தியா குரல் கொடுக்க வேண்டும் எனக் கோரி டில்லியில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்தியாவின் பாராமுகத்தை டில்லியின் ஆர்ப்பாட்டம் மிகத் தெளிவாக எடுத்தியம்பியிருக்கிறது.

ஜனாதிபதி ரணில், இந்தியா பயணமாக இருக்கும் நிலையில் டில்லியில் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்தும். இலங்கையில் தமிழர்கள் தமது பூர்வீக நிலங்களில் தமது இனமத சின்னங்களுடன் நிம்மதியாக வாழ வேண்டும்.

அதற்கு இந்தியா துணை நிற்க வேண்டும். இல்லையேல் வன்னிப் பெரு நிலப்பரப்பில் இறுதி யுத்தத்தில் நடந்த இன அழிப்பிலும் மிக மோசமான இன அழிப்பு நடக்க வாய்ப்புகள் அதிகம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** இருபாலையில உள்ள ஒரு சபையில நடந்த விடயம் எப்படி இருக்குது.

**கங்காணி:-** கதையாதிங்கோ... கதையாதிங்கோ... அச்சபையில எது நடந்தாலும் அது பற்றி பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்காயினம்.

இப்ப பாத்தியளோ அந்தத் தலைமைப் போதகர் அங்கிருந்த சிறுமிகள் மீது வன்மம் காட்டியிருக்கிறார் என்று தகவல் வருகுது.

ஆனாலும் இதுவரை குறித்த தலைமைப் போதகரைப் பொலிஸார் கைது செய்யவில்லை.

**மூப்பர்:-** அப்ப கங்காணியார் இதுபற்றி பொலிஸார் என்ன சொல்லுகினம்.

**கங்காணி:-** பொலிஸார் என்ன சொல்லுறது. தலைமைப்போதகர் தலைமறைவாகி விட்டார். அதால எதுவும் செய்ய முடியவில்லையாம்.

**சாத்திரியார்:-** அது சரி அந்தத் தலைமைப் போதகர் ஒரு சிவாச்சாரியராக இருந்தால், அவரைக் கொறகொற எண்டு பொலிஸார் இழுத்துக்கொண்டு போயிருப்பினம். அதுக்குப்பிறகு சொல்லவா வேணும்.

ஆனால் இது ஒரு சபைய ல்லோ. ஆகையால அங்க நடந்த சம்பவங்கள் அப்படியே புதைபட்டுப் போகும். பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மீதுதான் பழி வந்து சேரும்.

**வாத்தியார்:-** சரி... சரி... உந்தக் கேவலங்கெட்ட கதைகளை விட்டுட்டு, வெடுக்குநாறிமலையில இன்னமும் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யாமல் இருப்பது பற்றிக் கதையுங்க.

வாத்தியார் இப்படிக் கூறியதும் ஆலடியில் நிசப்தம் நிலவியது. நிசப்தத்தைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.



## ஒரு சிலரின் சுயநலத்தால் உடைக்கப்பட்ட இந்துபோட்

**விதானையார்:-** வெடுக்குநாறி மலையில இப்போதைக்கு அங்க பிரதிஷ்டை நடக்கப் போறதில்லை.

ஜனாதிபதியின்ர உறுதிமொழியை அமுல்படுத்துவதற்குப் பௌத்த துறவிகளோ அன்றி படைத்தரப்போ ஒருக்காலும் அனுமதிக்காது.

நீதிமன்ற உத்தரவுகளைக்கூட அமுல்படுத்திறதில பொலிஸார் தாமதம் காட்டுகிற நிலைமை இருக்கும் போது, வேற என்ன தான் செய்யமுடியும்.

**பண்டிதர்:-** வெடுக்குநாறி மலையில சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யாதவரை, வடக்கிற்கு வருகிற தென்பகுதி அரசியல் தலைவர்களைச் சந்திக்கிறதில்லை என நல்லை ஆதீன முதல்வர் விடுத்த அறிக்கை உண்மையிலயே பாராட்டப்பட வேணும்.

இப்படியான துணிகரமான தீர்மானங்களை எடுப்பதன் மூலம் தான் எங்கட சைவ சமயத்தின்ர கௌரவத்தைப் பாதுகாக்க முடியும்.

**சிறாப்பர்:-** நல்லை ஆதீன முதல்வர் விடுத்த அறிக்கை மிகவும் பொருத்தமானது. ஆனால் தென்பகுதி அரசியல்வாதிகள் சைவாலயங்களுக்குப்போனால், அங்கிருக்கிற சிவாச்சாரியர்கள் தென்பகுதி அரசியல்வாதிகளுக்கு காளாஞ்சி குடுப்பினம், பொன்னாடை போர்ப்பினம், மாலை அணிவிப்பினம். பிறகு எப்படி ஆதீன சுவாமிகளின்ர அறிவிப்பை நிலைநிறுத்திறது.

சிறாப்பர் இவ்வாறு கூறியதும் இடையில் குறுக்கிட்ட விதானையார் விசுவலிங்கம் அது தான் எங்களிட்ட ஒரு பொதுவான தலைமை இல்லை.

நல்லை ஆதீனசுவாமிகள் விடுத்த அறிவிப்பை எல்லா ஆலய நிர்வாகிகளும் சிவாச்சாரியர்களும் பின்பற்றினால் சைவ சமயத்தின்ர எதிர்காலத்தை நிச்சயம் காப்பாற்ற முடியும்.

ஆனால் வெடுக்குநாறி மலையில ஆதிலிங்கம் உடைக்கப்பட்டதுக்கு எங்கட அந்தணச் சிவாச்சாரியர்கள் கண்டனம் எதனையும் தெரிவிக்கவில்லை.

அவர்கள் மௌனமாக இருந்திட்டினம். இதுதான் என்னண்டு விளங்கல்ல.

இவ்வாறு விதானையார் விசுவலிங்கம் கூறியதும் ஆலடியில் இருந்தவர்கள் அசந்து போயினர்.

நிலைமையைப் புரிந்துகொண்ட வாத்தியார் வைத்திலிங்கம் விளக்கம் கொடுத்தார்.

**வாத்தியார்:-** இப்ப ஆலயங்கள் பொருளாதார மையங்களாக ஆகிவிட்டன. தீவகத்தில ஒரு சிவாச்சாரியர் 12 கோவில்களில நித்திய பூசை செய்கிறார்.

இவ்வாறான நிலையில அபிஷேகம், நைவேத்தியம், பூசை வழிபாடு என எல்லாமும் பிசகத்தான் செய்து, இதனால ஆலய அறங்காவலர்களுக்கும் சிவாச்சாரியர்களுக்குமிடையில கருத்து முரண்பாடும் ஏற்படுகிறது.

**சாத்திரியார்:-** ஓலைக் கொட்டகைகளிலும் விருட்சங்களுக்கு அடியிலும் இருந்த ஆலடிப்பிள்ளையாருக்கும், அரசடி வைரவருக்கும் பெருங்கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்தால் என்ன செய்யிறது.

முன்பெல்லாம் ஊரில இருக்கிறவர்கள் சங்கூதி, சேமக்கலம் அடித்துப் பூசை செய்தினம். அவ்வாறு ஊரவர்களால பூசை செய்யப்பட்ட கோவில்களை எல்லாம் இப்ப ஆகம விதிப்படி கட்டி, சிவாச்சாரியர்களிட்ட ஒப்படைத்து விட்டு ஐயா வந்தவரோ, பூசை நடந்ததோ, அபிஷேகம் நடந்த அடையாளம் இல்லை, புதிய பூக்களைக்காணவில்லை எண்டு தேடினால், ஆலய நிர்வாகத்திற்கும் சிவாச்சாரியர்களுக்குமிடையே முரண்பாடும் தர்க்கங்களும் ஏற்படத்தானே செய்யும்.

**பண்டிதர்:-** அதெண்டால் உண்மைதான். இந்தாப் பாருங்க எங்கட நாவலர் கலாசார மண்டபமும் நீதிமன்றப்படி ஏறி நிற்குது.

என்ன செய்யுறது எங்கட சமயத் தலைவர்கள் ஒன்று கூடி எடுத்த முடிவை மதிக்காத காரணத்தால தானே நாவலர் மண்டபம் நீதிமன்றத்துக்குப் போனது.

**வாத்தியார்:-** ஆறுமுகநாவலர் பிறந்து 200 ஆவது ஆண்டு நிறைவில நாங்கள் அவருக்குச் செய்த உதவி, அவற்ற பேரில அமைந்த மண்டபத்தை நீதிமன்றத்தில நிறுத்தினதுதான்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதற்குத் தனது ஒப்புதலை வழங்குவது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் அனைவரும் தமிழினத்தை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள் தானே?






தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் ஒட்டு மொத்த தமிழ் மக்களின் முதல்வரா?

**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சிவம் — வதிரி**

**வாள்வெட்டு ஓய்ந்து விட்டதே வியாசரே காரணம் என்ன?**

வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்கள் அனைத்தும் யாரோ ஒருவரின் பணிப்பின் பெயரிலேயே நடக்கின்றன. அவருக்கு தேவையான நேரம் வன்முறை நடக்கும். தேவையில்லாத நேரம் அது அடங்கிக் கிடக்கும்.

பலமான வாள்வெட்டு வன்முறை நடந்து இப்போது மயான அமைதி நிலவுகிறது.

இந்த அமைதிக்கு ஏதோ ஒரு புயல் உண்டென்பதுபோலஎமதுஆழ்மனம்சொல்கிறது. சரி பொறுத்திருந்து பார்ப்போமே என்ன நடக்கப்போகிறது என்பதை.

**மதுவன் — மீசாலை**

**தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் ஒட்டு மொத்த தமிழ் மக்களின் முதல்வரா?**

என் தந்தையார் வலக்கையில் மணிக்கூடு கட்டும் பழக்கம் கொண்டவர்.

அதை அவதானித்த நான் ஒரு நாள் ஏன் என்று கேட்டேன். அதற்கு அவர் எம்.ஜி.ஆர் வலது கையில் மணிக்கூடு கட்டும் பழக்கம் கொண்டவர்.

அவர் கொள்கை பிடித்தவர்களும் வலது கையில் மணிக்கூடு கட்டும் வழக்கத்தை கொண்டிருப்பர்கள் எனக் கூறினார்.

எனக்கு ஆச்சரியம். ஆனாலும் திரையில் நடித்ததைப்போல நிஜ வாழ்விலும் அரசியலிலும் தன்னை உண்மையாய் காட்டியவர் மக்கள் திலகம்.

அவரைப் போல ஏழைகளை மதிக்கும், அவர்களுக்கு உதவும் ஒரு முதல் வரை இனிமேல் தமிழகம் காணப்போவதில்லை என்பது மட்டும் உறுதி.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**தமிழர்களின் வழிபாட்டு உரிமையைப் பறித்தெடுப்பது எந்த வகையில் நியாயமானது வியாசரே?**

ஒரு திரைப்படத்தில் நம்பியாரின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படும்.

அப்போது அங்கு நின்ற ஒருவர் கூறுவார் எம்.ஜி.ஆர் இல்லாதது நம்பியாருக்கு குளிர் விட்டுப் போய்விட்டது என்று.

இப்போதைய செயற்பாடுகளைப் பார்க்கும் போது அந்த வசனம் தான் ஞாபகத்துக்கு வருகுது.

என்ன செய்வது ஒரு காலத்தில் எப்படி இருந்த இனம் இன்று அல்லல்பட்டு அடுத்தவர் உரிமையைப் பிச்சை போடுவார் என்று ஏங்கித் தவிக்கும் இனமாய் மாறியிருக்கிறது. எம்.ஜி.ஆர் இல்லாவிட்டால் நம்பியாரின் அட்டகாசம் அதிகரிக்கத்தானே செய்யும்.

**தருஷ் — மானிப்பாய்**

**ஏழையின் சிரிப்பில் இறைவன் உண்டு என்பது எப்படி என்று விளக்கவும்?**

சமீபத்தில் சமூக வலைத்தளத்தில் ஒரு காணொளி பார்த்தேன். அதில் சிறுவர் இல்லம் ஒன்றில் உணவு பரிமாறப்படுகிறது. 12 வயது மதிக்கத்தக்க அந்த சிறுவனின் தட்டில் உணவு இடப்படுகிறது. அதைப்பார்த்ததும் அவனுக்கு சந்தோசம் தாங்கமுடியாமல் சிரித்தபடி உண்ணத்தொடங்குகிறான்.

ஆனாலும் அவன் கண்களில் இருந்து பொல பொலவென ஆனந்த கண்ணீர் ஆறாய் கொட்டுகிறது. அதைத் துடைத்தபடி சிரித்துக் கொண்டே அந்த உணவை பௌவியமாக உண்ணுகிறான் அந்த ஏழைச் சிறுவன்.

**திகான் — வடமராட்சி**

**திட்டமிட்டு தமிழ் மக்கள் பழிவாங்கப் படுகிறார்கள் இதற்கு தமிழ் அரசியல் தலைவர்களே காரணம். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

நீங்கள் அத்தனை பேரும் உத்தமர் தானா சொல்லுங்கள்? உங்கள் ஆசை நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள் எனும் திரைப்பட பாடல் வரிகள் நினைவுக்கு வருகின்றது.

தேர்தல் காலங்களில் புலியாய் இருக்கும் எம்மவர்கள் தேர்தல் முடிந்து வெற்றி கண்டதும் சிங்கமாய் மாறி சிங்காரித்து பேரினவாத அரசிற்கு குழல் ஊதுவது ஒன்றும் புதிதில்லையே. இவர்களுக்கு வாக்களித்தவர்களைத் தேடித் தேடி செ---ல் அடிக்க வேண்டும்.

**ரிஷிநாதர் — யாழ்ப்பாணம்**

**யாழ்.கோட்டை, பண்ணைப்பக்கம் மாலை 6 மணிக்குப் பின்னர் போக கூச்சமாக இருக்கிறதே வியாசரே?**

நாம் சிறுவர்களாய் இருக்கும் போது கொழும்புக்குச் செல்லும்போது கோள்பேஸ் பக்கம் சென்றால் அந்தக் கடற்கரைப் பக்கம் திரும்ப விடாமல் தலையை மற்றப் பக்கத்திற்கு தனது கையினால் திருப்பியபடி இழுத்துச் செல்வார் அப்பா.

ஆனாலும் கடைக்கண்ணால் பார்த்தால் வெறும் குடைகள் தான் கண்ணுக்குத் தெரியும்.

அந்தக் குடையிலும் மிக மோசமான காட்சிகளை பண்ணைப்பக்கம் பார்க்கலாமாம் என பலர் சொல்லக்கேட்கும் போது பேரினவாதம் தான் நினைத்ததைச் செய்து முடித்துவிட்டது என்பது புலனாகிறது.

**சிதம்பரம் — நவாலி**

**வெளிநாட்டின் கடன் கிடைத்து விட்டால் நாடு மீட்சி பெற்றுவிட்டது என்று பொருளா?**

ஐ.நா அமர்வு வரும்போது சர்வதேசம் எம்மைக் கைவிடாது. இதோ இலங்கையின் கழுத்தை நெரிக்கப்போகிறது.

இனி எமக்கு (தமிழினத்துக்கு) சுதந்திரம் கிடைத்துவிடும் எனநாம்பலமாய்நம்புவோம். ஆனாலும் அது நிஜமில்லை. ஏனென்றால் சர்வதேசத்துக்கு தமிழினத்தின் பிரச்சினையோ, இன அழிப்போ ஒரு பெரிய விடயமே அல்ல.

இலங்கையின் வளங்களை எவ்வாறு சுரண்டலாம் என்பதே அவர்களின் சிந்தனை-திட்டம்.

**சுதன் — குப்பிழான்**

**தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் அனைவரும் தமிழினத்தை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள் தானே?**

நூறுவீதம் உண்மை. தென்னிலங்கை தலைவர்களின் வாக்குறுதிகளை நம்பி அவர்களுக்கு வாக்களியுங்கள் என்று தமிழர்களிடத்தே கோரியவர்கள் எம் தமிழ் தலைவர்கள். இவர்களே தமிழர் தலையில் மண்ணை அள்ளிப்போட்ட புண்ணியவான்கள் என்பதையும் தமிழினம் மறக்கவில்லை.

தமது அரசியல் இருப்புக்காகவும் தாம் அரசியலூடே மாட மாளிகை கட்டி வாழவும் தமிழினத்தின் தலைகளை அடமானம் வைத்தவர்களை இன்னும் இன்னும் நம்பிக்கொண்டிருக்கிறோம் என்பதுதான் வேதனையின் உச்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கா லத்தால் அழியாத னங்கள்

திரைப்படம் : ஆயிரம் பொய்

பாடியவர் : டி.எம். சௌந்தரராஜன், பி. சுசீலா

இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்



புலவர் சொன்னதும் பொய்யே பொய்யே ஆஹா...
பூவையர் ஜாடையும் பொய்யே பொய்யே
கலைகள் சொன்னதும் பொய்யே பொய்யே ஆஆஆ
காதல் ஒன்று தான் மெய்யே மெய்யே

அழகு என்பதும் மெய்யே மெய்யே ஓஹோ
ஆசை என்பதும் மெய்யே மெய்யே
புழுகும் நோக்கமும் மெய்யே மெய்யே – உங்கள்
பாஷை ஒன்று தான் பொய்யே பொய்யே

புலவர் சொன்னதும் பொய்யே பொய்யே

நீலக் கண்கள் தாமரை போல் சிவப்பதெப்போது?
நினைவில்லாமல் மாரிபிலே மயங்கும் போது
வார்த்தை ஜாலம் பேச்சிலே வருவதெப்போது?
மங்கையின் மடியிலே புரளும் போது ஆ
ஆயிரம் பொய் சொன்னால் காரியமாகும்
அந்த நாளில் அது தானே காவியமாகும்

அழகு என்பதும் மெய்யே மெய்யே அஹா
ஆசை என்பதும் மெய்யே மெய்யே
புழுகும் நோக்கமும் மெய்யே மெய்யே – உங்கள்
பாஷை ஒன்று தான் பொய்யே பொய்யே

புலவர் சொன்னதும் பொய்யே பொய்யே

என்ன தான் பெண்ணிடத்தில் இத்தனை இன்பம்?
இங்கு தான் தோன்றியது முத்தமிழ் சங்கம்
ஆஆஆஆ ஆஆஆ ஆஆஆஆஆ
பொன்னிலே தோய்த்தெடுத்த பூவையர் அங்கம்
போதையில் ஆட வைக்கும் ஆடவர் அங்கம்
தேன்நிலவு காண்பதற்கு தேடுது நெஞ்சம்
வான்நிலவின் கீழிருந்து வாடுது மஞ்சம்

புலவர் சொன்னதும் பொய்யே பொய்யே ஆஹா...
பூவையர் ஜாடையும் பொய்யே பொய்யே
கலைகள் சொன்னதும் பொய்யே பொய்யே ஆஆஆ
காதல் ஒன்று தான் மெய்யே மெய்யே ம்ம்
புலவர் சொன்னதும் பொய்யே பொய்யே

# ஜெயிச்சா இப்படி ஜெயிக்கனும்!

ஐ.பி.எல் போட்டிகள் தொடங்கி சம்மர் சீசன் களைகட்டத் தொடங்கிவிட்டது. அறிமுகத்திலேயே அதிரடி காண்பித்து நடப்பு சம்பியனாக வலம்வரும் குஜராத் டைட்டன்ஸ் அணி, மீண்டும் கோப்பையைத் தக்கவைக்கும் முனைப்போடு மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் ஜாம்பவான்களாகச் சுற்றித் திரிந்து, கடைசி சீசனில் பலத்த அடி வாங்கிய சென்னையும் மும்பையும் இழந்த பெருமையை மீட்பதற்காக வெறிகொண்டு போராடுகின்றனர்.

இந்த முறை யாவது "ஈ சாலா கப் நமதே" சாத்தியப்படுத்தி விட வேண்டுமென பெங்களூர் அணி எதை எதையோ செய்து கொண்டிருக்கிறது.

இப்படியொரு அதிபரபரப்பான சூழலில் இந்த 'நெஞ்சம் மறப்பதில்லை' பகுதியில் ஐ.பி.எல் தவிர வேறு எதைப் பற்றியாவது பேசினால் தெய்வக் குற்றமாகி விடும். எனவே, ஐ.பி.எல் இல் நிகழ்ந்த ஓர் அசகாய சம்பவத்தைப் பற்றியே இந்தப் பகுதியில் பார்க்கலாம்.

ஐ.பி.எல் வரலாற்றில் அதிக முறை சம்பியன் பட்டத்தை வென்ற அணி என்றால், அது மும்பை இந்தியன்ஸ்தான். 5 முறை சம்பியனானது. அதேசமயம், ஐ.பி.எல் வரலாற்றிலேயே அதிக தாக்கத்தை ஏற்படுத்திய அணி சென்னை சுப்பர் கிங்ஸ்.



4 முறை சம்பியன் பட்டத்தை வென்றிருக்கும் சென்னை சுப்பர் கிங்ஸ், இரண்டே இரண்டு தடவை தவிர, மற்ற அனைத்துத் தடவையும் ப்ளே ஆஃப் சுற்றுக்குத் தகுதிப் பெற்றிருக்கிறது. சென்னை அளவுக்கு சீரான செயற்பாட்டை வெளிக்காட்டி திருப்தியான முடிவுகளைப் பெற்ற ஓர் அணி என்று ஐ.பி.எல் இல் வேறெந்த அணியையும் குறிப்பிட முடியாது.

ஐ.பி.எல் இன் தொடக்க சீசனிலேயே இந்திய கிரிக்கெட்டின் வருங்கால நாயகன்எனக்கணிக்கப்பட்ட டோனியை ஏலத்தில் பெரும் தொகை கொடுத்து சென்னை அணி வாங்கியது. அங்கிருந்துதான் சென்னை அணியின் வெற்றிப்பயணமும் தொடங்கியது. முதல் சீசனிலேயே இறுதிப்போட்டி வரை சென்னை அணி தகுதி பெற்றிருந்தது. நூலிழையில்தான் ராஜஸ்தான் அணியிடம் கோப்பையைத் தவறவிட்டது. அதற்கடுத்த சீசனில் அரையிறுதி வரை சென்னை முன்னேறியது. மூன்றாவது சீசன், சென்னை அணிக்கு ரொம்பவே முக்கியமான சீசன். லீக் சுற்றுகளில் சென்னை அணி அவ்வளவு சிறப்பாக ஆடவில்லை. தொடர்ந்து தோற்றுக்கொண்டே இருந்தது.

டோனியுமே காயம் காரணமாக இரண்டு மூன்று போட்டிகளில் ஆட முடியாமல் போனது. அணியே ஒரு சரிவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இதைப் பற்றி அஸ்வின் கூட தனது யூடியூப் சனலில் நகைச்சுவையாகப் பேசியிருப்பார். "ரொம்பவே மோசமான அந்தச் சூழலில், எனக்கென்னவோ நாம் பைனல்ஸ்க்குப் போயிகப் அடிச்சுருவோமோன்னு தோணுது" என சக வீரர்களிடம் கூறினேன்.

அவர்கள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள் எனப் பேசியிருந்தார். ஆம், அப்படியொரு சூழல்தான் அப்போது இருந்தது. அணியின் மீது நம்பிக்கையே இல்லாத நிலை. ஆனால், கடைசியில் மேஜிக் நடந்தது. அஸ்வின் சொன்னது தான் நிகழ்ந்தது. வெறும் 7 போட்டிகளை மட்டுமே வென்று சென்னை அணி அரையிறுதிக்கு முன்னேறியது. அதன் பிறகு எல்லாமே சரவெடிதான்.

இறுதிப்போட்டியில் முரட்டு ஃபார்மிலிருந்த மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தி, சம்பியன் பட்டத்தை வென்றது. அடுத்த சீசனில் ரொம்பவே சௌகர்யமாக ஆடி இறுதிப்போட்டிக்கு முன்னேறி, பெங்களூரை வீழ்த்தி மீண்டும் சம்பியனானது.

சென்னை அணியின் வரலாற்றில் இதுவரையிலான காலம் ஒரு பொற்காலம் எனலாம். ஏனெனில், இதன் பிறகு தான் இந்தக் கதையில் முக்கியத் திருப்பங்கள் எல்லாம் அரங்கேறத் தொடங்கின.

அடுத்தடுத்த சீசன்களிலும் சீரான பெர்ஃபாமென்ஸைக் கொடுத்து ப்ளே ஆஃப் வரை முன்னேறியது சென்னை. சமயங்களில் இறுதிப்போட்டி வரை வந்து ரன்னர் அப்பும் ஆனது. இந்நிலையில் தான் அந்த அதிர்ச்சி கரமான சம்பவம்.

சூதாட்டப் புகாரில் சிக்கிய சென்னை மற்றும் ராஜஸ்தான் இரண்டு அணிகளுக்கும் இரண்டாண்டுகள் தடை விதிக்கப்பட்டது. ஒரே தீர்ப்பில் சென்னை அணியின் சாம்ராஜ்யம் மொத்தமாகச் சரிந்துபோனது.

அதுவரை ஐ.பி.எல் இன் அதிசிறந்த அணி என்கிற அடையாளத்தைத் தன்னகத்தே கொண்டிருந்த அணியின் மீது, 'சூதாட்டக்காரர்கள்... மோசடிக்காரர்கள்' எனும் அடையாளம் கறையாக ஒட்டிக்கொண்டது.

வீழ்ச்சிகளும் சறுக்கல்களும் தொடர்கதையாக நீண்டு கொண்டே இருப்பதில்லை. ஏதோ ஒரு கட்டத்தில் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பத்தான் செய்யும். அதுதான் இயற்கை. இரண்டாண்டு தடைக்காலம் முடிந்து சென்னை அணி மீண்டும் ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்றது.

சென்னை கம்பேக் கொடுக்கும் அந்த 2018 சீசனின் முதல் போட்டியே வான்கடேவில் மும்பை இந்தியன்ஸுக்கு எதிராக சென்னையும் மும்பை இந்தியன்ஸும் பரம வைரிகள். இரண்டாண்டுகள் கழித்து சென்னை ஆடும் போட்டி என்பதால் சென்னை அணி வென்றே ஆக வேண்டிய சூழல். ஆனால், சென்னை அணி அந்தப்போட்டியை ஆடிய விதத்தைப் பார்க்கையில் வெல்வதற்கான அறிகுறியே தெரியவில்லை. ரசிகர்கள் அத்தனை பேரும் சோர்ந்து போயிருந்தனர்.

அப்போதுதான் இன்னொரு மேஜிக் நடந்தது. சேஸிங்கில் அந்தக் கடைசி 3-4 ஓவர்களில் ப்ராவோ ஒற்றை ஆளாக நின்று மும்பை அணியின் பந்து வீச்சை நாலாபுறமும் சிதறடித்தார்.

வெல்லவே முடியாது எனும் சூழலிலிருந்து அசகாய வெற்றியைப் பதிவு செய்தது, சென்னை அணி. "ஜெயிச்சா இப்படி ஜெயிக்கனும்" என்பது போன்ற வெற்றி அது. அங்கிருந்து சென்னை அணிக்கு எல்லாமே புலிப்பாய்ச்சல்தான். இறுதிப்போட்டி வரை முன்னேறி சன்ரைசர்ஸை வீழ்த்தி சம்பியன் பட்டத்தையும் வென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணத்தைப் பெருக்கும் பழக்கங்கள்

பணத்தை நிர்வகித்தல் என்பது நம் அனைவருக்கும் பெரும் பிரச்சினையாக இருக்க முக்கியமான காரணம், நாம் பாதி வாழ்க்கையை வாழ்ந்து முடித்த பின்தான் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறோம். பாதி வாழ்க்கையை வாழ்ந்து முடித்த பின் பணம் குறித்த ஏக்கமும் பதற்றமும் நம் மனதில் குடிகொண்டு விடுகிறபடியால் பணம் குறித்த விடயம் அனைத்தும் நமக்குக் கடினமான ஒன்றாகிவிடுகிறது.

"நிதி நிர்வாகத்தில் ஒருவர் சிறந்து விளங்க வேண்டுமெனில், ஏழு பழக்கங்களை அவசியம் கொண்டிருக்க வேண்டும். இந்தப் பழக்கவழக்கங்கள் பணம் குறித்த எதிர்மறை எண்ணங்கள் உங்களை விட்டு விலகவும் நல்ல நேர்மறையான எண்ணங்களுடன் பணம் குறித்த விடயங்களை அணுகவும் உதவும்" என்கிறார் ஆசிரியர். அந்த ஏழு பழக்கங்கள் என்னென்ன..?.

**உணர்வுபூர்வமாக அல்ல பகுத்தறிவுடன் செயற்படுங்கள்...**

"பணம் என்பது மிகவும் உணர்வுபூர்வமான ஒரு விடயமாக நம்மிடையே நிலவுகிறது. நாம் ஒவ்வொருவரும் பணத்துடன் வெவ்வேறு விதமான உணர்வுபூர்வமான உறவைக் கொண்டிருக்கிறோம்.

இது நம்முடைய வருமானம், செலவு, கடன், சேமிப்பு மற்றும் முதலீடு போன்றவற்றில் தீவிரமான பாதிப்பை உருவாக்குகிறது. இதிலிருந்து வெளியேறி சரியான முடிவுகளை எடுக்க, முதலில் நாம் நமக்கும் பணத்துக்கும் இருக்கும் உறவைப் பகுத்தறிவு ரீதியிலானதாக மாற்றி அமைக்க வேண்டும்.

பணம் குறித்து உணர்வுபூர்வமாக சிந்திக்காமல் பகுத்தறிவுடன் அதை ஓர் உபகரணமாக நிலைநிறுத்தி சிந்தித்தால் பணம் ரீதியான வெற்றியை நிச்சயம் அடைய முடியும். ஏனென்றால், உணர்வுரீதியாகத் தொடர்பு செய்து கொள்வதைத் துண்டித்த உடனேயே பணம் குறித்த பயம் நம்மை விட்டு விலகிச் சென்றுவிடும் என்பதே இதில் உள்ள முக்கியமான பலன்.

**முழுக் கவனத்தைச் செலுத்தி பணத்தை செலவு செய்யுங்கள்...**

பொதுவாக, நாம் அதிகமாகச் சம்பாதித்திருந்தாலும், குறைவாக சம்பாதித்தாலும் நாம் சம்பாதித்த பணம் எங்கே போனது என்று தெரியாமல் தவிக்கிறோம்.

முழுக்கவனம் செலுத்தி பணம் குறித்த தேர்வுகளைச் செய்யும்போது, எங்கே போனது என் பணமெல்லாம் என்கிற கேள்வி உங்களுடைய மனதில் தோன்றவே தோன்றாது. அவசியம், கனவு, பிடித்தது, தேவை என்கிற நான்குக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை முழுக் கவனத்தைச் செலுத்துவதன் மூலமே நம்மால் உணர முடியும்.



**சேமிப்பைத் தனியாகப் பிரித்து தானியங்கும் வகையில் அமைத்துக் கொள்ளுங்கள்...**

மிகவும் கஷ்டப்பட்டு இவ்வளவு தொகை சேமிக்க வேண்டும் என்று உறுதி செய்து தீர்மானித்து விட்டீர்கள் எனில், அந்த சேமிப்பைத் தானியங்கி முறையில் சேமிக்கும்படி மாற்றிவிடுங்கள். இப்படிச் செய்வதன் மூலம் பங்குச் சந்தையில் முதலீடு செய்ய பணம் ஒதுக்குவது தொடங்கி, அவசரத் தேவைக்கான பணத்தை சேமிப்பது வரை எதுவாக இருந்தாலும் எளிதாகச் செய்து முடிக்க முடியும். இப்படி, சில ஆண்டுகளுக்கு விடாமல் செய்து பார்த்தால், அது பெருந்தொகையாக மாறி இருக்கும்.

**உங்களுக்கான இலக்குகளை நிர்ணயுங்கள்...**

ஒரு ஃபைனான்ஷியல் ஆலோசகரிடம் நீங்கள் சென்றீர்கள் எனில், அவர் கேட்கும் முதல் கேள்வி, உங்களுடைய நிதி இலக்கு என்ன என்பதைத்தானே! சுலபமாக பதில் சொல்லிவிடக் கூடிய கேள்வி இல்லை இது. அதனாலேயே இந்தக் கேள்விக்கான பதிலைக் கண்டறிய நீங்கள் அவசியம் அதிக நேரம் செலவிட வேண்டும். ஏனென்றால், இலக்குகளே ஒரு விடயத்தை செய்து முடிக்கும் சிறந்த ஊக்குவிக்கும் கருவிகள் ஆகும்.

**பணம் தொடர்பான விடயங்களை ஆர்வத்துடன் தெரிந்து கொள்ளுங்கள்...**

உங்களுடைய நிதிவளம் மற்றும் அதைப் பெருக்குவது குறித்த விடயங்களில் எதிலெல்லாம் உங்களுக்குப் புரிதல் சரிவர இல்லாமல் இருக்கிறதோ, அவற்றை எல்லாம் தெரிந்து கொள்வதில் தீவிர ஆர்வம் கொண்டவராக இருங்கள்.

**உங்களுடைய நிதித் திட்டங்களை நீங்களே தீட்டுங்கள்...**

இலக்குகளை நிர்ணயிப்பதன் காரணம், நாம் எங்கே செல்ல வேண்டும் என்பதைத் தெளிவாகத் தீர்மானிக்கத்தான். அந்த இலக்கைச் சென்றடைவது என்பது, நாம் போகும் பாதை குறித்த திட்டங்களைத் (நடைமுறைகளை) தீட்டுவதில்தான் இருக்கிறது.

இலக்குகளை பிரித்து சிறியதாக்கி அதை அடைவதற்கான நடைமுறைகளை உருவாக்குவது எப்படி என்றும் வரி மற்றும் காம்பவுண்டிங் என்ற இரண்டு விடயங்களை சரியாக நிர்வாகம் செய்தால் கிடைக்கக்கூடிய நன்மைகள் என்னென்ன என்பது பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

**பணம் குறித்துப் பேச நேரம் ஒதுக்குங்கள்...**

பணம் குறித்து பேச நாம் மிகவும் சங்கோஜப்படுகிறோம். அது குறித்து பேச அசௌகர்யம் நம்முடைய மனதில் குடிகொண்டு விடுகிறது. பணம் குறித்த உணர்வுபூர்வமான உறவை ஒழிப்பதுடன், உங்களுடைய வாழ்க்கைத் துணை, நண்பர்கள், பார்ட்னர் போன்றவர்களுடன் பணம் குறித்து உரையாடும் சூழ்நிலைகளை உருவாக்கி, அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

# சட்டையில் ஏசி; கோடையில் குளு குளு

குளிர்ச்சியாக இருக்கக்கூடிய வகையில் சட்டையில் வைத்துக் கொள்வது போன்ற புதிய ஏசியை அறிமுகப்படுத்தியுள்ளது சோனி. Reon Pocket 2 என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த சாதனம் அதன் முந்தைய வெர்ஷனை போலவே உருவாக்கப்பட்டுள்ளது.

சோனி, சட்டையில் அணியக்கூடிய ஏர் கண்டிஷனரை கடந்த ஆண்டு ரியான் பாக்கெட் என்ற பெயரில் அறிமுகப்படுத்தியது. இப்போது அதன் அடுத்த வெர்ஷனை வெளியிட்டுள்ளது. Reon Pocket 2 என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த சாதனம் அதன் முந்தைய வெர்ஷனை போலவே உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய மாடலின் குளிரூட்டும் திறன்கள் மேம்படுத்தப்பட்டு உள்ளதாகவும் உடற்பயிற்சிகளுக்கு மிகவும் பொருத்தமானதும். மேலும், இது கோடையில் பொது மக்களின் தினசரி பயன்பாட்டுக்கு மற்றும் பயணத்துக்கு பெரும் உபயோகமாக இருக்கும் என்றும் சோனி கூறுகிறது.

இது கோடைக்காலத்தில் குளிர்ச்சியாக வைத்திருப்பதோடு, இதையே குளிர் காலத்தில் வெப்பம் இயக்கியாகவும் பயன்படுத்தலாம். உடல் மேற்பரப்பில் தொடர்புடையதால் இதன்



இயந்திர பாகங்கள் துருப்பிடிக்காத் வண்ணம் ஸ்கு கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பிரத்தியேக ஸ்மார்ட்போன் செயலி மூலம் இந்த சாதனத்தை கட்டுப்படுத்த முடியும். இது வியர்வை- புரூஃப் பாக தயாரிக்கப் பட்டுள்ளதாக சோனி கூறியுள்ளது. Reon Pocket 2 இன் விலை 14,850 யென் (இந்தியமதிப்பில் சுமார் ரூ. 10,300). மற்றும் தற்போது இது ஜப்பானில் மட்டுமே கிடைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகம் வருதே

ஞாபகம் வருதே ஞாபகம் வருதே...
தசாப்தம் கடந்த நினைவுகளெல்லாம்
ஞாபகம் வருதே... துள்ளித் திரிந்த
பள்ளிப் பருவம் மெல்ல மெல்ல
ஞாபகம் வருதே... கணக்குப் பாடம்
சொல்ல மறந்து வாத்தியார் போட்ட
பிரம்படியெல்லாம் ஞாபகம் வருதே...
மழையில் நனைந்து வெள்ள மடித்து
சட்டை நனைந்து வீடு செல்கையில்
அம்மா தந்த ஆதரவெல்லாம்
ஞாபகம் வருதே... சந்திவெளியில்
முந்தி நின்று மாங்காய் திருடி
உண்ட பொழுதுகள் ஞாபகம் வருதே...
நண்பர் வட்டம் ஒன்றுகூடி
நாலா பக்கம் வண்டி ஓடி
முந்திச் சென்றது ஞாபகம் வருதே...
ஆலமரத்தின் அடியிலிருந்து
அரட்டையடித்து சண்டை போட்டது
ஞாபகம் வருதே... ஏதோ நினைவுகள்
இன்னும் நீள ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே...



க. நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.

# நினைவுகள் சலனமற்று ஓடிக் கொண்டேயிருக்கும் ஒரு நதி



ஆழத்தில் அமைதி நிறைந்திருந்தாலும்
மருங்குகளில் கிடைக்கும்
அத்தனையையும் சுமந்தே
நகர்கிறது...

நகர்வு சாத்தியமாகின்ற போது
பாதைகளையும் பயணங்களையும்
பொறுத்தே
கூட வருவதும் இடையில் விலகுவதும்
நிகழ்ந்து விடுகிறது...

நதியை சலனப்படுத்துபவை யாவும்
நதியோட்டத்தில் மறைந்து போக
நதியின் மேன்மை துலங்குவது போலே தான்
இந்த வாழ்க்கையும்...

எதையோ நினைத்து
எண்ணங்களினூடே நடந்து
எதையோ தொலைத்து
தொலைந்து போகாமல் இருக்க
நதி போல ஓடிக் கொண்டேயிருக்க வேண்டும்

சங்கரி சிவகணேசன்.

# அரசியல் நாடகம்

கனவுகள் ஏந்திய காகிதப் படகில்
காவியமாகும் தமிழ் இனக் குடிகள்

தீர்வினை வேண்டிடும் குரலாய் ஒலித்திடும்
ஒரு விரல் வாக்கினை உணர்வுடன் செலுத்திட

காலம் கடந்தினும் தமிழர் மடைமை
அழைக்குது இன்றும் தமிழின நரிகளை

உலகவர் வியந்திடும் தமிழ் இன தலைகளை
தூற்றிய நதிகளின் நாக்கினை அறுத்திட

எல்லையில் நடந்திடும் ஓரின கலவரம்
அரசியல் நாடக அரங்கினில் ஏறிட

அணைந்திடும் நெருப்பை மூட்டிடும் சதிகள்
ஒளிருது இன்றும் எம் இன நரிகளாய்

தமிழ் இன எழுச்சியை கண்டிட இணைவோம்
அரசியல் நாடக அரங்கினை அழித்திட.




ந. விதுஷன்,
யா/ஹாட்லிக் கல்லூரி.

# மௌனத்தின் தேடல்-603



# அன்பிற்கு அளவேது?

பசியுடன் வாடிடும் ஏழைக்கு
உணவு அளிப்பது இரக்க உணர்வு
அதிலும் அருகிலிருந்துமே
தம் கரத்தினினால்
உணவுட்டுவதுமோ பாச உணர்வு

தங்கத்தமிழன்,
காரைநகர்.

# பெருமிதமாமோ

பேரரின் படிப்புப் பட்டறை
பாசப் பிணைப்பின் பரிசம்
பள்ளி கொள்ளும் பரவசம்
பல்கலையின் பாங்கென
பேர்த்தியின் கட்டியணைப்பு
பேறாய் வாய்த்த பெருமிதமாமோ!

கார்வண்ணன், காவலூர்.

# மனிதன் என்பவன்...

இதைத் தலைவிதியென்று
விரைந்து கடந்து செல்லாமல்
சிந்தித்து உணவை ஊட்டுவது
பெருந்தன்மைக்குரியது
பதவி உயர்வுகள் போன்று
பணிவும் வளர்ந்திருக்கின்றது
சத்தியமாய் உண்மையைக் கூறு
நீ மனிதர்களில் ஒருவன் தானா
இல்லவே இல்லையில்லை
இயலாமைக்கு இரங்கும் இறைவன்

க.நாகராசா,
நுணாவில்.

# உயிர் கொடுக்கிறான்

ஆண்டிக்கு அன்னம் ஊட்டும் அன்பர்
வேண்டுவது வேறொன்றும் இல்லை
தொண்டன் பசியாறி அவன் முகத்தில்
தோன்றும் மலர்ச்சியைக் காணவே
உண்டி கொடுக்கிறான் உயிர் கொடுக்கிறான்

பி. யதுர்சன்.
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# வேண்டும் விழிப்பு

தமிழாய் வாழும் தமிழர்களே
உசார் கொள்ளுங்கள்
உண்டியற்றவனுக்கு
உணவுட்டியதை
படமெடுத்து பவிசு காட்டி
மதம் மாற்றுவதற்கு
சுகபோகம் தேடும் சுயநலமிகள்
சமூகப் புல்லுருவிகளாய்
தயார் நிலையிலுள்ளனர்
ஆதலால் விழிப்பாயிருப்பீர்
தமிழர்கள்

சி.இ.அன்புதுரை. மானிப்பாய்.

# மௌனத்தின் தேடல்- 604



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# பரந்த மனம்

படியளக்க,
பரமன் வேண்டியதில்லை
பாரினில்
பட்டினியாய் இருப்பவரிடை
பரந்த மனம் படைத்த
பாரி வள்ளல்கள் போதும்.

திருமதி. ஜெ. விஜயநிர்மலா,
சாரதா வீதி, சங்கத்தானை.

# நாம் உலகிடம்...

இனவாதம், மதபேதம்
இலங்கையில் உள்ளவரை
நாம் உலகிடம் இரந்தே
உயிர் வாழ வேண்டும்.

பி.மதுஷ்சன்.
தையிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## புதிய பொறுப்பு




காலத்தின் 56

இத்தனை பொறுப்புகளையும் தன்மீது சுமத்தி விட்டவர்கள் இரண்டு பெண்கள் என்பதை எண்ணிப்படுத்துக் கிடந்த அந்த ஏகாந்த நிலையிலும் தனக்குத் தானே "களுக்" என்று சிரித்துக் கொண்டான். சோழப் பேரரசோ, ஸ்ரீவிஜய சாம்ராஜ்யமோ இத்தனை பொறுப்புகளைத் தன்மீது சுமத்தவில்லையென்பதையும் இத்தனை சாம்ராஜ்யங்கள் சாதிக்காததை இரண்டு பெண்கள் சாதித்துவிட்டதையும் நினைத்துப் புருஷனுடைய பலவீனம் எத்தனை கேவலமானது என்று எண்ணிப் புன்முறுவலும் கொண்டான்.

அமீர், கண்டியத்தேவன் இருவர் உதவியால் அகூதாவின் மரக்கலத்தில் தப்பிய தான் மட்டும் இஷ்டப்பட்டிருந்தால், அகூதா தன்னை ஏதாவதொரு வணிக மரக்கலத்தில் புகாருக்கு அனுப்பி இருப்பானென்பதையும் தானே வேண்டுமென்று கடற்படைப் பயிற்சி பெற ஆசைப்பட்டு அவனுடன் ஒரு வருடகாலம் கழித்ததையும் யோசித்துப் பார்த்து. "இதற்கு மூலகாரணம் என்ன? என்பதையும் ஆராய்ந்தான்.

"கடற்படைப் பயிற்சி பெற்றதற்குக் காரணம் கலிங்கத்தின் கடலாதிக்கத்தை உடைக்கும் ஆசைதான். அதற்கு வித்து விதைத்தது தமிழர்களைக் கலிங்கத்துப் பீமன் படுத்திய கொடுமையும் சோழர்களின் சமாதான கரத்தை அவன் ஏற்க மறுத்ததும் தான்.

ஆனால் அதற்கெல்லாம் கொள்கைகளை வகுக்கும் பொறுப்பு சோழ மன்னரையும் அமைச்சர் குழுவையும் சேர்ந்ததல்லவா? அவர்கள் வகுக்கும் கொள்கைகளை நிறைவேற்றுவது தானே படைத்தலைவன் பொறுப்பு?" என்று தனக்குள் கேள்விகளை எழுப்பிக்கொண்ட படைத்தலைவன். தன் போக்குக்கு வித்து விதைத்தது பீமனுடைய கொடுமையானாலும் அந்த வித்தைத் தாங்கி நின்றது காஞ்சனா என்ற கன்னியே என்ற முடிவுக்கும் வந்தான். முடிவை உள்ளம் ஒப்பவில்லை. ஒப்புவது அதற்குத் தர்ம சங்கடம். ஒப்பவில்லையானாலும் உண்மை அதுதானே!

"அதுதான் போகட்டும்! அக்ஷயமுனைக்கு வந்த நான் இதைத் தளமாக்கிக் கொள்ளவும், மரக்கலத்தைச் செப்பனிட்டுக் கொள்ளவுமே வந்தேன். அதற்குப் பூர்வாங்கமாகக் கடற்கரைக் கொள்ளைக் கூட்டத்தை மித்ரபேதம் செய்தேன். கோட்டைத் தலைவன் உதவியை அவன் இஷ்டத்துடனோ இஷ்டவிரோதமாகவோ பெறத் தீர்மானித்தேன். ஆனால் இந்த இரவு நிகழ்ச்சிக்கு ஏன் போனேன்? போகாமலிருந்திருந்தால் நடனம் முடிந்திருக்கும். சில கொலைகள் நடந்திருக்கும்.

காலையில் நிம்மதி நிலவியிருக்கும். இனி நிம்மதி இல்லை. பூர்வ குடிகளின் பெரும் தொல்லை ஏற்படும். அதற்குக் காரணம் நான் தான். ஏன் காரணமானேன்? என்று மட்டும் சில கேள்விகளைக் கிளப்பிக்கொண்ட இளையபல்லவனுக்கு விடை தெளிவாகத் தெரிந்திருந்தது. "மஞ்சளழகியின் வசீகரத் தோற்றம் தான் காரணம். அது விரித்த வலைதான் அடுத்து வரும் பல தொல்லைகளுக்கு விதை விதைத் திருக்கிறது"

என்ற தீர்மானம் அவன் உள்ளத்தில் ஓங்கி நின்றது.

இப்படி இரண்டு பெண்களையும் அவர்கள் மறைமுகமாகத் தன்மீது சுமத்திவிட்ட பொறுப்புகளையும் எண்ணி எண்ணி வியப்பின் வசப்பட்ட இளையபல்லவன். பெண்ணெனும் ஒரு சிருஷ்டி இல்லாவிட்டால் உலகத்தில் மற்ற சிருஷ்டிகளும் இல்லை, தொல்லைகளுமில்லை. சண்டை சச்சரவுகளுமில்லை என்று ஆதிகாலம் தொட்டு வந்த புராணங்கள் சொன்ன வேதாந்தரீதியில் எண்ணமிட்டான். அந்த வேதாந்தம் பெருவாரியான மனித சமூகத்தை என்ன, பெரிய பெரிய அறிவாளிகளையும் எப்படிச் சீர்திருத்த முடியவில்லையோ அப்படியே இளையபல்லவனையும் சீர்திருத்த முடியவில்லை. அப்படிச் சீர்திருத்தாத காரணத்தால், தன் செய்கைகளில் சில நன்மைகளும் விளைந்திருப்பதாக நினைத்தான் சோழர் படைத்தலைவன்.

(தொடரும்)

# நான் வைரமுத்து பேசுகிறேன்...

## தமிழ் கூறு நல்லுலகு

சமூக மேம்பாட்டிற்கு அவர்கள் ஒரு வெளிச்சத்தை நம்பினார்கள். தனி மனிதனின் ஆணவமும் அகந்தையும் வேரோடு கிள்ளி எறியப்பட்டுவிட்டால் சமூக மேன்மை சாத்தியமாகும்

அதற்குப் பக்தி மார்க்கமே பாலமாகும் என்றோர் நம்பிக்கை இருந்தது அவர்களுக்கு. காலம் கட்டிக் கொடுத்த பாலம் அது.

அவர்களின் பாதை பிழையாகக் கூட இருக்கலாம். ஆனால், அவர்களின் பாட்டு நிஜம். அன்பில் அகந்தையைக் கரைத்துவிடு என்ற மெய்யான, மேன்மையான செய்தியின் வெளிப்பாடுதான் பக்திப்பனுவல்கள்.



**"வான்கெட்டு**
**மாருதம் மாய்ந்து**
**அழல், நீர், மண் கெடினும்**
**தான் கெட்டலின்றிச்**
**சலிப் பறியாத் தன்மையனுக்கு**
**ஊன்கெட்டு உணர்வு கெட்டு என்**
**உள்ளமும் போய்**
**நான் கெட்டவா பாடித் தெள்ளேணம்**
**கொட்டேமோ."**

தேனில் நனைந்த திருவாசகம் இது. தன்னில் தானைக் கரைத்து விடுதல் என்ற தத்துவம் தமிழ் கூறு நல்லுலகம் புவிக்குக் கொடுத்த புதையல். தங்கத் தமிழ், போரை ஓர் அறம் எனவும் அது தவிர்க்க இயலாத தர்மம் எனவும் பேசுகிறது.

குழுவினங்களாய்ப் பிரிந்து வாழ்ந்த சமூக அமைப்பில்

**"ஒருவரை ஒருவர் அடுதலும் தொலைதலும் புதுவதன்று இவ்வுலகத் தியற்கை"**

என்று பாடுவது பாவப் பட்டியலில் சேராதுதான். ஆனால், ஒரு பன்னிரண்டு நூற்றாண்டுப் பரிணாமத்தில் போரே இல்லாத ஒரு புது உலகத்தைக் கம்பனின் கற்பனை கனாக்கண்டிருக்கிறது.

போர் புகழை வளர்க்கும் என்று தினவு கொண்டவன் கனவு காண்கிறான். போர் இன்மையே - அமைதியே புகழை வளர்க்கும் என்ற கருத்து கம்பனிடம் கருக் கொள்கிறது.

**"யாரொடும்பகை கொள்ளலன் என்ற பின் போரொடுங்கும் புகழொடுங்காது."**

இந்த வரிகள் இந்த அணுகுண்டு யுகத்தில் ஒவ்வொரு தேசமும் தன் நெற்றியில் ஒட்டிக் கொள்ள வேண்டிய நிஜவரிகள்.

உயிர்களை நேசிக்க உணர்ந்து கொள் மனிதனே என்று எம் இலக்கியம் உரத்த குரலில் உலகத்திற்கு ஓதுகிறது. இந்த அணு ஆயுத வளர்ச்சியில் சில நொடிகளில் பூமி உருண்டையைப் பொசுக்கி விட முடியும்.

சில நிமிட அணுகுண்டு மழையில் மனித குலம் அழுகிவிடக் கூடும். சில இலட்சம் ஆண்டுகளாகச் சேமிக்கப்பட்ட நாகரிகம் ஒரு தீக்குச்சி உரசப்படும் நேரத்தில் காணாமல் போய்விடும்.

பிரமிட்டுகளும் தாஜ்மஹாலும் அகழ்வாராய்ச்சிப் புத்தகங்களின் அத்தியாயங்களாகி விடும். இந்த யுகத்தில் தான் மனித நேசம் மலர வேண்டும்.

**"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்!"**

என்றவனும்,

**"காக்கை குருவி எங்கள் ஜாதி – நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்!"**

என்று பாடியவனும்

"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்"

என்று குரல் கொடுத்தவனும் உலக சமாதானத்தின் தூதுவர்கள் அல்லவா?

தமிழ் கூறு நல்லுலகம் நினைக்கப்பட வேண்டிய நேரம் இதுதான்.

உலக வல்லரசுகளே! உங்கள் ஆயுதக் கிடங்குகளில், சோதனைச் சாலைகளில், பீரங்கிகளின் பீடங்களில், உங்கள் யுத்தக் கப்பல்களின் முதுகுகளில் எங்கள் திருவள்ளுவரின், கம்பனின், எங்கள் பாரதியின்- பாரதிதாசனின் எழுத்துக்களை மொழி பெயர்த்து எழுதி வையுங்கள்.

இதயத்தைத் தவிர விஞ்ஞானம் எல்லாவற்றையும் வளர்த்துக் கொண்டிருக்கிறது அந்த விஞ்ஞானத்திற்கு எங்களின் ஈரக் கொள்கைகள் இதயம் வழங்கட்டும்.

விஞ்ஞானத்தின் மேல் மனிதன் சவாரி செய்ய வேண்டும். மனிதனின் மேல் விஞ்ஞானம் சவாரி செய்துவிடக் கூடாது.

எங்கள் தமிழ் கூறு நல்லுலகு உலகைப் பார்த்து இதையே ஓதிக் கொண்டிருக்கிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

337

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# எத்தகைய தலைவலி ஆபத்தானவை?

பெரும்பாலான தலைவலிகள் ஆபத்து அற்றவை. ஆயினும் சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற தலைவலி ஆபத்தானதாக அமைகின்றது. இவ்வாறான ஆபத்தான தலைவலிகளுக்குக் காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. மண்டையோட்டுக் குழியினுள் அமுக்கம் அதிகரித்தல்.
2. சிலவகைத் தொற்றுக்கள் உதாரணம்: மூளை அழற்சி.
3. இராட்சத் கலநாடியழற்சி (Giant arteritis).
4. மண்டையோட்டுக் குழியினுள் ஏற்படும் குருதிப்பெருக்கு.
5. மூளையமுன்னான் பாய்பொருளின் கனவளவில் ஏற்படும் குறைவு.
6. தலையில் அடிபடுதலின் பின்னரான தலைவலி.
7. திடீரென ஏற்படும் கண்ணின் அமுக்க அதிகரிப்பு.
8. மூளையில் ஏற்படும் கட்டிகள், சீழ்க்கட்டிகள்.

மேற்கூறிய காரணிகளால் ஏற்படும் தலைவலிக்கு விசேட சிகிச்சைகள் அவசியமாகின்றன. ஏனெனில் மேற்கூறிய காரணங்கள் பாரதூரமான விளைவுகளைத் தரவல்லன. ஏன்? சில உயிராபத்தையே விளைவிக்கக் கூடியன.

▸ புதிதாக திடீரென்று தீவிரமான தலைவலி ஏற்பட்டால்.

▸ முன் எப்போதும் எதிர்நோக்காத உணராத முற்றிலும் வேறுபட்டதான தீவிரமான தலைவலி ஏற்பட்டால்.


▸ தன்னுணர்வில் மாற்றம் ஏற்பட்டால் (Altered concio usnees).

▸ தீவிரகாய்ச்சல், வாந்தி இருப்பின்.

▸ அண்மையில் தலையில் அடிபட்டிருப்பின்.

▸ காலையில் எழும் போதே தலையிடி இருப்பதுடன் இருமும் போதோ அல்லது தும்மும் போது தலைவலி அதிகரிப்பின்.

▸ பார்வையில் மாற்றம் ஏற்படின் (குனியும்போது/வளையும் போது/ இருமும்போது



உடனடி வைத்திய ஆலோசனை பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறான நோய் அறிகுறிகள் தலைவலிக்கான அடிப்படைக் காரணி. உயிராபத்தை விளைவிக்கவல்ல நோய் நிலைமைகளால் ஏற்பட்டதென்பதை எடுத்தியம்புகின்றன.

### ஆபத்தற்ற தலைவலி வகைகள்

1.ஒற்றைத்தலைவலி (Migraine)
2. வேலைப்பளு காரணமாக ஏற்படும் தலைவலி (Tension Headache)
3.கிளஸ்ரர் தலைவலி (Cluster Headache)

என்பன சில ஆபத்தற்ற தலைவலி வகைகளாகும்.

### ஒற்றைத் தலைவலி

பொதுவாக நாற்பது வயதுக்குட்பட்டவர்களிலே ஏற்படுகின்ற தலைவலியின் மற்றொரு வகையாகும். இது தீவிரமான தலைவலியை ஏற்படுத்தும். இடிப்பது போன்ற உணர்வு ஏற்படுத்தும் தலைவலியாகும். இதனுடன் சேர்ந்து வயிற்றுப் பிரட்டல், வாந்தி என்பன காணப்படலாம். இவ் வகைத் தலைவலி உடையோர் வழமையான வேலைகளில் ஈடுபட முடியாது.

### வேலைப்பளு காரணமாக ஏற்படும் தலைவலி

மன அழுத்தம், காலநிலை மாற்றம், நித்திரை குழம்புதல், சொக்லேட், சீஸ், மதுபானம், அதிக வெளிச்சம், அதிகரித்த ஒலி, அதிகரித்த அசைவுகள் போன்றன இவ்வகைத் தலைவலியைத் தூண்ட வல்லன. ஒற்றைத் தலைவலியால் அவதியுறுவோர் மேற்சொன்ன காரணிகளைத் தவிர்த்தல் உசிதமானது. சிலருக்கு மருந்துகள் மூலம் குணப்படுத்த வேண்டிய தேவை ஏற்படலாம்.

### கிளஸ்ரர் தலைவலி

இருபக்கத்தலையிலும் உணரப்படுகின்ற மந்தமான ஒரு தலைவலியாகக் காணப்படும். சிலரில் பட்டியை இறுக்கியது போன்ற உணர்வு காணப்படும்.

சிலரில் கண்களுக்குப் பின்னால் அமுக்குவது போன்று காணப்படும். சிலர் தலையுச்சியில் அமுக்குவது போன்று உணர்வர்.

இவ்வகைத் தலைவலி சிலரில் மாதக்கணக்காகக் கூடக் காணப்படுவதுண்டு. இவ்வகைத் தலைவலி அதிகமன அழுத்தம், வேலைப்பளு உள்ளவர்களிலேயே பொதுவாக ஏற்படுகின்றது. இவர்களுக்கு தளர்வுப் பயிற்சிகள் பரிந்துரைக்கப்படுகின்றன. சிலருக்கு வலி நிவாரணிகள் தேவைப்படலாம்.

இருபதுக்கும் நாற்பதுக்குமிடையிலான வயதுடைய ஆண்களில் ஏற்படவல்ல 3 வகைத் தலைவலியாக இது காணப்படுகின்றது. மிகத் தீவிரமான தாங்கமுடியாத தலைவலியாகக் காணப்படும். ஒருபக்கத் தலைப் பகுதியிலேயே ஏற்படும்.

கண்ணின் பின்னாக உருவெடுக்கும். இவ்வகைத் தலைவலியுடன் கண்ணீர் சுரத்தல், மூக்கடைப்பு, கண் செந்நிறமாதல் தற்காலிகமாகக் கண்ணை இறுக்கி மூட முடியாதிருத்தல் போன்றனவும் காணப்படலாம்.

தலைவலி நீடிக்கும் நேரம் 30-90 நிமிடங்களாக இருப்பினும் ஒரே நாளில் பலதடவைகள் ஏற்படலாம். நித்திரையில் கூட ஏற்படலாம். இவ்வகைத் தலைவலி பொதுவாக ஆண்டொன்றில் குறிப்பிட்ட காலத்துக்கே ஏற்படும்.

இவ்வகைத் தலைவலி உடையோருக்கு முற்காப்பு மருந்துகள் வழங்க முடிவதில்லையாயினும் தலைவலி ஏற்படும் சந்தர்ப்பத்தில் மருந்துகள் மூலம் தலைவலியை நிறுத்த முடிகின்றது.

இவ்வகைத் தலைவலி உடையோரில் வலி நிவாரணிகள் பயனற்றவை ஆகின்றன.

**Dr.தேவரஞ்சனா புவனேந்திரன்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான [illegible] இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்.ஜோன்ஸ் கல்லூரி
## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## தரம் 01 இற்கான மாணவர் அனுமதி - 2024

1. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 17.04.2023 முதல் 12.05.2023 வரை பெற்றுக் கொள்ளலாம்.

   ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

   இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 31.05.2023 புதன்கிழமை அத்திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

2. விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நாட்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

3. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவத்துடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photocopy) இணைக்கப்பட வேண்டும்.

4. சமாதான நீதவான் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடவுச்சீட்டுக்குரிய அளவிலான (2 அங்குலம் X 2 அங்குலம்) புகைப்படம் ஒன்றும் விண்ணப்பப்படிவத்துடன் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்.

5. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 2000.00

6. வயதெல்லைகள்
   தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2018 க்கும் 31.01.2019 க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

7. தரம் 01 இற்குரிய நேர்முகப்பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்படும்.

குறிப்பு:
தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தரம் 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது.

அதிபர்கள். (C-6303)


## புத்தாண்டை முன்னிட்டு பட்டாசுகளின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த டிசெம்பர் பண்டிகை காலத்துடன் ஒப்பிடுகையில், இந்த புத்தாண்டு காலத்தில் பட்டாசுகளின் விலை சுமார் 40 வீதத்தால் அதிகரித்துள்ளது.

சந்தையில் அத்தியாவசியப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய உணவுப் பொருட்கள், உடைகள் மற்றும் இதர பொருட்களின் விலைகளும் கணிசமாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர். (நி)


### மணமகன் தேவை

1995. இந்து. விசாகம். Doctor (Norway). புலோலி. பதிவு #8146. No Broker Commission Register fees only. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. www. EQMarriage Service.com அழையுங்கள் 077 664 9401 (C-1976)

### மணமகன் தேவை

1991. இந்து. உத்தராடம். Doctor. கரவெட்டி. பதிவு #8121. No Broker Commission, Register fees only. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. www. EQMarriage Service.com அழையுங்கள் 077 664 9401 (C-1976)

### மணமகள் தேவை

1992. இந்து. பரணி. Doctor . காரைநகர். பதிவு #8860. No Broker Commission, Register fees only. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. www. EQMarriage Service.com அழையுங்கள் 077 664 9401 (C-1975)

### மணமகள் தேவை

1991. இந்து. ரேவதி. Doctor . புங்குடுதீவு. பதிவு #8928 No Broker Commission, Register fees only. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. www. EQMarriage Service.com அழையுங்கள் 077 664 9401 (C-1975)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 130 | 160 | 140 | 200 |
| பச்சைமிளகாய் | 280 | 300 | 300 | 400 |
| தக்காளி | 100 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 150 | 200 |
| கோவா | 100 | 120 | 100 | 150 |
| கரட் | 100 | 180 | 140 | 200 |
| பூசணி | 60 | 80 | 60 | 50 |
| புடோல் | 140 | 140 | 140 | 160 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 100 | 140 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 300 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 240 | 250 | 200 | 250 |
| லீக்ஸ் | 250 | 240 | 300 | 300 |
| பீற்றூட் | 100 | 180 | 150 | 160 |
| கறிமிளகாய் | 250 | 300 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 1000 | 600 | 1200 |
| போஞ்சி | 200 | 200 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 280 | 280 | 160 | 280 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 50 | 120 |
| தேசிக்காய் | 350 | 250 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 250 | 300 | 280 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 150 | — | 450 |
| முள்ளங்கி | 80 | 100 | — | 240 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 140 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | — | 150 |


## சுன்னாகம், வாழ்வக நிறுவனத்தின் வாழ்நாள் தலைவரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வு பெற்ற விரிவுரையாளருமாகிய

## உயர்திரு. ஆறுமுகம் ரவீந்திரன் அவர்களின்

## மணிவிழா சிறப்பு மலர் 09.04.2023



சேவைக்கு மணிமகுடம்
சூட்டும் மாநகர சபையின் யாழ் விருது பெறும்
தலைவரது கரங்கள் – 05.11.2021





தேகாந்த நிலையில் அன்னைக்கு
வழங்கிய கௌரவ கலாநிதி பட்டம் பெறும்
தலைவரது கரங்கள் 06.10.2010

பிறப்பு:- 03.03.1963 திருநெல்வேலி கிழக்கு
தாய்-தந்தை:- ஆறுமுகம்-தங்கமணி
சகோதரர்:- திருமதி.தி.ஜெயராணி,
திரு.ஆ.பரமேஸ்வரன்
கல்வி:- ஆரம்பக்கல்வி-கைதடி நவீல்ட் பாடசாலை
இடைநிலை:- யாழ்.இந்துக்கல்லூரி
உயர்கல்வி:-யாழ்.பல்கலைக்கழகம், கலைமாணி 1990 பட்டப்பின் . கல்வி டிப்ளோமா-1995
முதுகல்விமாணி:- 2001
திருமணம்:- 1991 மோகனவதனி ரவீந்திரன்
தொழில் :- ஆசிரியர் யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம் 1993- 2004 வரை
விரிவுரையாளர்:- 2004 முதல் 2023 வரை

பிள்ளைகள்:-திருமதி.கீர்த்தனா கார்த்திகன், திருமதி.பிரவீணா சுகிராஜ், திரு.ரவீந்திரன் கீர்த்திகன்.
சமூகப்பணி:- வாழ்நாள் தலைவர்-2006 , முதல் வாழ்வகம்
முன்னாள் தலைவர்:-யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்.
முன்னாள் நிர்வாக உறுப்பினர்:- AROD
முன்னாள் உறுப்பினர் நல்லூர் அரிமாக்கழகம்
அதிதி விரிவுரையாளர் :- இலங்கை திறந்த பல்கலைக்கழகம், இலங்கைத் தேசிய கல்வி நிறுவகம்.
விசேட புலமைப்பரிசில் :- விசேட கல்வி தொடர்பான தென்கொரியா பயணம்.

Congratulations

வடபுலத்து வான்மை மிகு நற்குருவே
வாழிய மிடுக்குடை வாழ்வகத்தலைமகனே
வாழிய திருநெல்வேலியூர் திருப்பொற்கரத்தோனே
வாழிய விசேட கல்விக்கே விசேடத்துவமானவரே
வாழிய விழிவலுவிழந்தோரின் வழிகாவலனே
வாழிய வாழ்வகத்தம்மாவின் முதன்மை நன்மகனே
வாழிய கலைகளுக்கெல்லாம் கலையானவரே
வாழிய வடபுலத்து வாண்மைமிகு நற்குருவே
வாழிய வாழிய பல்லாண்டு வாழியவே
சுபம்

(சி-6320)

வாழ்வக சமூகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சோப கிருது' வருஷ வருஷப்பிறப்புக் கருமங்கள்

### சோப கிருது வருஷ ஜாதகம் வாக்கிய பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| குரு | சூரி புதன் ராகு | சுக் | செவ் |
| சனி | புது வருஷ கிரக நிலை | | லக்கினம் |
| சந் | | | |
| | | கேது | |

**வாக்கிய பஞ்சாங்கம்**

சோப கிருது வருஷம் சித்திரை மாதம் 01 ஆம் திகதி (14.04.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02 மணி 03 நிமிடத்தில் அபரபக்க நவமித் திதியில் திருவோண நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில், சாத்தியம் நாமயோகத்தில்,கரசக் கரணத்தில் கடக லக்கினத்தில், மீன நவாம்சத்தில், சுக்கிரன் காலவோரையில், செவ்வாய் சூக்குமவோரையில், சாத்வீக குண வேளையில் நட்சத்திர பட்சியாகிய மயில் சாலுத் தொழிலும், சூக்கும பட்சி அரசுத் தொழிலும் செய்யும் காலத்தில் இப்புதிய "சோப கிருது" வருஷம் பிறக்கின்றது. அன்று முற்பகல் 10.03 மணி முதல் அன்று பிற்பகல் 6.03 மணிவரை விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து சிரசில் கொன்றை இலையும் காலில் புன்கிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து வெள்ளை நிறமுள்ள பட்டாடையாயினும் வெள்ளைக் கரையமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து முத்து, வைரம் இணைந்த- ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி நறுமலர் சூடி தத்தம் வீடுகளில் சூரியனுக்குப் பொங்கல் பூஜைகள் செய்து, விக்கினேஸ்வரர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து இயன்ற தானதர்மங் களையாற்றி குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று உற்றார், நண்பர்களுடன் அளவளாவி அறுசுவை உணவுடன் கடுகு, எள், புளி, நெல்லிக்கனி சேர்த்த ருந்தி தாம்பூலம் தரித்து கண்ணாடி, தீபம், நிறைகுடம், தேவதைகளின் திருவுருவம், திருமுறைப் புத்தகம், தாமரை முதலிய பூக்கள்,பழவகை, மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற் றிலை, பாக்கு முதலிய மங்கலப் பொரு ட்களைத் தரித்து புதிய வருஷப் பலன் களை வாசித்தும் கேட்டும் நன்குண ர்ந்து தூய தவத்தாற் பெற்ற மானிடப் பிறவியில் இனிது சிந்தித்து மங்களகர மாக வாழக்கடவர்.

**திருக்கணித பஞ்சாங்கம்**

சோபகிருது வருஷம் சித்திரை மாதம் 01 ஆம் நாள் (14.04.2023) வெள்ளிக் கிழமை பகல் 2.59 மணிக்கு "சோப கிருது" எனும் பெயருடைய தமிழ்ப் புது வருடம் உதயமாகின்றது. இது 60 வருஷ சுற்று வட்டத்தில் 37 ஆவது வருஷமாகும்.அந்நேரம் நட்சத்திரம் திருவோணம் 2 ஆம் பாதம். திதி - அபரபட்ச நவமி, அசுபயோகம் அன்று

### சோபகிருது வருஷ ஜாதகம் திருக்கணித பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| குரு-28-10 நெப்-02-01 | சூரி-00-00 ராகு-10-33 புதன்-18-58 யுரே-23-19 | சுக் 09-32 | செவ் 15-53 |
| சனி-09-51 | புது வருஷ கிரக நிலை | | |
| சந்-13-25 | | | 10-12 லக்கினம் |
| | | 10-33 கேது | |

பகல் 10.59 மணி முதல் பிற்பகல் 6.59 மணிவரை மேட சங்கிரமான புண்ணிய காலமாகும். வருஷம் பிறக்கும் போது உதய லக்கினம் சிங்கம் ஆகும்.

அனைவரும் சித்திரை 01 ஆம் திகதி அதிகாலையில் துயிலெழுந்து மேற்படி புண்ணிய காலத்தில் சங்கற்ப பூர்வமாக மருத்து நீர் தேய்த்து தலையில் புங்க மிலையும் காலில் ஆலிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து, வெண்ணிற பட்டா டையாயினும் அல்லது மஞ்சள் கரைய மைந்த வெள்ளைப் புது வஸ்திரமா யினும் தரித்து வைரம் பதிக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்து விநாயகர் முதலிய இஷ்ட குல தெய்வங்களைத் தரிசனம் செய்து இயன்ற தானங்கள் வழங்கி புது வருஷ சூரியனுக்கு பொங் கல், பூசை வழிபாடுகள் மேற்கொண்டு குரு,பெற்றோர் முதலியோரை வண ங்கி அவர்களின் ஆசி பெற்று இயன்ற தானாதிகள் வழங்கி பிதிர் விதானு சாரிகள் சிரார்த்தம், தர்ப்பணம் என்பன செய்து நண்பர்கள், விருந்தினர்களை வரவேற்று சுற்றமித்திரர்களிடருந்து கடுகு தாளிதம் செய்த புளியோதரை, தயிரன்னம், நெல்லிக்காய்த் துவை யல் முதலியவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போசனம் செய்து தாம்பூலம் அருந்தி சுகந்த சந்தன புஸ்பாதிகளை அணிந்து புதுப் பஞ்சா ங்க பலன்களைக் கேட்டு புதுவருஷத்தில் ஆற்றக் கூடிய நற்கருமங்களைச் சிந் தித்து மங்கலகரமாக வாழ்வார்களாக.

**மருத்து நீர் தயாரித்தல்**

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம் பூ, துளசி, விஸ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர்,வில்வம்,அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோ சனை, மஞ்சள்,மிளகு, திற்பிலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலிட்டு காய் ச்சிக் கொள்க.

**சோபகிருது தன்னிற் றொல்லுலகெல்லாஞ் செழிக்குங்**
**கோபமகன்று குணம் பெருகுஞ்-சோபனங்கள்**
**உண்டாகு மாரி பொழியாமற் பெய்யுமெல்லா**
**முண்டாகு மென்றே யுரை**

**சங்கிரம தோச நட்சத்திரங்கள்**

ரோகினி, மிருகசீரிடம், திருவாதிரை,புனர்பூசம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் கால்கள், அத்தம், உத்தரடாம் 2ஆம்,3ஆம்,4ஆம் கால்கள், திருவோணம்,அவிட்டம் 1 ஆம் 2ஆம் கால்கள் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து இயன்ற தானதர்மங் களைச் செய்து சங்கிரம தோசத்தை நிவர்த்தி செய்யக் கடவர்.

**கைவிஷேடம்- வாக்கிய பஞ்சாங்கம்**

15.04.2023 சனி முற்பகல் 7.52 மணிமுதல் 9.00 மணிவரை
16.04.2023 ஞாயிறு முற்பகல் 7.49 மணிமுதல் 9.48 மணிவரை

**கைவிஷேடம்- திருக்கணித பஞ்சாங்கம்**

15.04.2023 சனி காலை 6.45 மணிமுதல் 7.30 மணிவரை
15.04.2023 சனி முற்பகல் 8.00 மணிமுதல் 8.55 மணிவரை
16.04.2023 ஞாயிறு முற்பகல் 8.00 மணிமுதல் 9.30 மணிவரை
16.04.2023 ஞாயிறு பிற்பகல் 12.10 மணிமுதல் 01.15 மணிவரை

# உலகமே இந்தியா-சீனாவை நம்பித்தான் ஐ.எம்.எப் வெளியிட்ட தகவல்

**(வோஷிங்டன்)**

**சர்வதேச பொருளாதார வளர்ச்சியில் 50 சதவீத பங்கீடு இந்தியா மற்றும் சீனா கையில் உள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை நிர்வாக இயக்குநர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.**




இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், "2023 ஆம் ஆண்டு பொரு ளாதார வளர்ச்சி அடையும் சந்தைகளை பார்க்கும் போது ஆசியா தான் மிகவும் பிரகாச மாக உள்ளது.

அதிலும் முக்கியமாக இந்தியா மற்றும் சீனா 2023 ஆம் ஆண்டு சர்வதேச பொரு ளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும்.

ஏனைய சந்தைகள் சரிவு பாதையில் உள்ளது.

கடந்த சில வருடமாக சர்வ தேச பொருளாதாரம் கொரோனா தொற்று, ரஷ்யா - உக்ரைன் போர் மூலம் பாதித்து வருகிறது.

இதில் முக்கியமாக 2022 ஆம் ஆண்டில் ரஷ்யா - உக் ரைன் போர் காரணமாக 6.1 சதவீதமாக இருந்த சர்வதேச பொருளாதார வளர்ச்சி பாதியாக குறைந்து 3.4 சதவீதமாக குறைந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் வல்லரசு நாடுகள் மந்தமான பொருளாதார வளர்ச்சியை பாதிக்க உள்ளது.

முக்கியமாக அமெரிக்க பொருளாதாரத்தை பாதிக்கும் காரணிகள் அளவுக்கு அதிக மாக உள்ளது.வட்டி விகித உயர்வில் தொடங்கி பண வீக் கம், பணிநீக்கம், வேலை வாய்ப்பு, பிராந்திய வங்கிகளின் நிலையற்ற தன்மை எனப் பல பிரச்சினைகள் அடுக்கடுக்காக உள்ளன.

இதேபோல், ஒட்டுமொத்த ஐரோப்பிய சந்தையும் ரஷ்ய - உக்ரைன் போர் காரண மாகவும், கச்சா எண்ணெய் விலை உயர்வு காரணமாக வும் பெரும் பாதிப்பை எதிர் கொண்டு வருகிறது.

இதனால் வல்லரசு நாடுகள் 2023 ஆம் ஆண்டில் அதிக படியான பாதிப்பை எதிர்கொள் ளும் என அறிவிக்கப்பட்டுள் ளது என அவர் தெரிவித் தார். (நி)

# இஸ்ரேலின் தலைநகரில் காரால் மோதி தாக்குதல்

## ஒருவர் பலி, ஏழு பேர் காயம்



, (டெல்அவி)

இஸ்ரேல் தலைநகர் டெல்அவியில் பொதுமக்கள் மீது காரை மோதி மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் இத்தாலியை சேர்ந்த சுற்று லாப் பயணியொருவர் கொல் லப்பட்டுள்ளதுடன் ஏழுபேர் காயமடைந்துள்ளனர்.

இத்தாலியை சேர்ந்த அலெசான்டிரோ பரினி என்ற நபரே கொல்லப்பட்டு ள்ளார் என இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளார் என பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்குகரையில் பிரிட் டிஸ் இஸ்ரேலிய பெண் ணொருவர் சுட்டுக் கொல் லப்பட்ட சம்பவத்தை தொட ர்ந்து இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாகிய ஆடையில் எப்பொழுதும் இருவகை நூல்கள் இருக்கும். நன்மை, தீமையே அவை.
~ ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இயேசுபிரானின் உயிர்த்தெழுகை உணர்த்துகின்ற தத்துவம் உணர்மினே!

இன்று உயிர்த்த ஞாயிறு. இயேசுபிரான் உயிர்த்தெழுந்த திருநாள்.

மனிதகுலத்தைப் பாவத்தினின்றும் மீட்டெடுக்க வந்துதித்த இயேசுபிரான் அனுபவித்த துன்பங்கள் கொஞ்சமல்ல.

உன்னைப் போல் பிறரையும் நேசி என்று கூறி, அன்பின் மகிமையை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளித்த திருமகனை யார் என்று உணராதகவட்டமொன்று கொல் என்று கத்துகிறது.

தண்டனை வழங்கியே ஆகவேண்டும் என்ற அதர்மவாதிகளின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

எதுவும் செய்ய முடியாத பிலாத்து மன்னன் தர்மத்தை நிலை நாட்ட முடியாமல் தள்ளாடுகின்றான்.

நீங்கள் தண்டனை வழங்கக் கோரும் அவர் கடவுளின் பிரசன்னம். மனித குலத்தின் மீட்பர். அவரின் மகிமையை அறியாமல் அவருக்கு தண்டனை தரக்கோருவது பாவத்தின் சன்மானத்தை நீங்கள் அனுபவிப்பதற்கானது என்று எடுத்துரைக்கும் வல்லமை இல்லாமல் பிலாத்து மன்னன் தண்ணீர் கொண்டு தன் கரம் கழுவி பாவத்தினின்றும் தன்னை விடுவித்துக் கொள்கிறான்.

அந்தோ! மீட்பராய் வந்துதித்த இயேசுபிரான் சிலுவையில் அறைபடுகின்றார்.

உலகச் சீரழிவின் காரணர்கள் சிரித்து மகிழ்கின்றார்.

மரணம் தமக்கேயன்றி சிலுவையில் அறையப்பட்ட இயேசுபிரானுக்கு அல்ல என்ற உண்மையை உணராத பாவகாரியர் தாம் வழங்கிய தண்டனையை இட்டு மகிழ்ந்து குதூகலிக்கின்றார்.

நாம் நினைத்தால் எதையும் செய்வோம் என்ற திமிர்த்தனத்தில் மார்தட்டி ஆணவத்தின் உச்சத்தில் குதித்து கொண்டாடுகின்றார்.

தமக்கு நடக்கப்போவது என்ன என்பதை உணராத பிரகிருதிகள் பிதாவின் சுதன் என்றறியாது தாம் வழங்கிய தண்டனை தக்கதென்று கெம்புகின்றார்.

ஆனால் அவையெல்லாம் அழிவின் அறிகுறிகள். அதர்மத்தின் வெறித்தனங்கள். இப்பிரபஞ்சத்தின் இயக்கத்தை உணராத பேதலிப்புகள்.

ஆம், இவ்வுலகம் பிதாவெனும் பிறவாயாக்கைப் பெரியோனின் திருவுளத்தால் மனுக்குலத்துக்கும் ஏனை ஜீவராசிகளுக்குமாகத் தந்தருளப்பட்ட அழகிய பூந்தோட்டம்.

ஆயினும் அத்தோட்டத்தில் தீய செடிகளும் தீய பழங்களும் தீய சிந்தனைகளும் நிறைந்திருக்கும்.

அதிலிருந்து மீள்வதாயின் ஆனந்தமயமாகிய கடவுளைப் பரிபூரணமாக ஏற்று அனைத்து ஜீவராசிகள் மீதும் அன்பு பாராட்டி மன்னிக்கும் மகோன்னதத்துடன் வாழ்வதன் மூலமே இறப்பினின்றும் விடுதலை பெற்று என்றும் உயிர்ப்பும் உயிருமாக வாழ முடியும்.

இத்தத்துவத்தை உணர்த்தவே இயேசுபிரான் உயிர்த்தெழுந்தார். அவரின் உயிர்த்தெழுகை இவ்வுலகை நிச்சயம் தர்மத்தில் நின்று வாழவைக்கும்.

## தேர்தல் தொடர்பில் கலந்துரையாட திங்கள் பிரதமரை சந்திக்கிறது தேர்தல்கள் ஆணைக்குழு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்ந்தும் நெருக்கடியாகவே காணப்படுகின்ற நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நாளை திங்கட்கிழமை பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்திக்கவுள்ளனர்.

தவிர்க்க முடியாத காரணிகளால் கடந்த வாரம் பிரதமருடனான சந்திப்பு இடம்பெற வில்லை என்பதால் இவ்வாரம் நிச்சயம் குறித்த சந்திப்பு இடம்பெறுமென தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் பிரதமரை சந்திக்கவுள்ளதாக கூறப்பட்ட போதிலும், அவ்வாறு எந்தவொரு சந்திப்பும் இடம்பெறாமை குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், திங்கட்கிழமை பிரதமருடன் நிச்சயம் சந்திப்பு இடம்பெறும். கடந்த வாரம் தவிர்க்க முடியாத காரணிகளால் சந்திப்பு இடம்பெறவில்லை. இந்த சந்திப்பின்போது நிதி நெருக்கடியின் காரணமாக எம்மால் அடுத்த கட்டமாக எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றமை தொடர்பில் பிரதமருக்கு தெளிவுபடுத்தப்படும். அதற்கமைய எடுக்கப்படும் முடிவுகளுக்கமையவே வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணிகள், தபால் மூல வாக்கெடுப்பு உள்ளிட்டவை தொடர்பில் தீர்மானிக்க முடியும். இது குறித்து தேர்தல் ஆணைகுழுவின் உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம் பெறும். இதன்போது தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்றார். (ம-7,9)

## இளவாலையில் இளைஞர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல்

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனிப்புலம் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் காயமடைந்த இளைஞர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். பண்ணாகம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று வீதியால் காரில் சென்று கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரை வழிமறித்து கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளனர். (ம-7,9,104)

## ஒழுக்கமும் சட்டமும் இன்றி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது
### ரவி கருணாநாயக்க

ஒழுக்கமும் சட்டமும் இன்றி ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவெனவும் எனவே மக்கள் இந்த நேரத்தில் மிகவும் புத்திசாலித்தனமாகவும், பொறுப்புடனும் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் மக்களைப் பலப்படுத்துவதற்கும் அன்றி நாட்டை அழிப்பதற்காகவே எதிர்க்கட்சிகளும் சில தொழிற்சங்கங்களும் செயற்படுகின்றன என்றும் குற்றம் சாட்டியுள்ளார். அரசியல் அறியாமை காரணமாகவே பல அரசாங்கம் தோல்வியினை சந்திக்கின்றன என்றும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7,9)

## கொழும்புத்துறையில் விருந்தினர் விடுதியில் திடீர் தீ விபத்து

யாழ், கொழும்புத்துறை பிரதான வீதியில் சுண்டிக்குளி பகுதியில் வீடொன்றில் இயங்கி வந்த தனியார் விருந்தினர் விடுதியில் எவருமற்ற நிலையில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

நேற்றுக் காலை 9 மணியவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

இந்நிலையில் இது குறித்து யாழ் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மின்னொழுக்கே குறித்த தீ விபத்துக்குக் காரணமென சந்தேகம் வெளியிடப்பட்டுள்ள நிலையில் சுமார் எட்டுலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் தீயில் கருகி நாசமாகியுள்ளது. (ம-7,9)

## கிரிக்கெட் இறுதிப்போட்டியும் பரிசில் வழங்கும் நிகழ்வும்

கலாமன்ற பிரீமியர் லீக் கிரிக்கெட் இறுதிச் சுற்றுப் போட்டியும் பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கலாமன்ற விளையாட்டுக் கழகத் தலைவர் தி.நவநீதராஜ் தலைமையில் யாழ். முத்துத்தம்பி விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வட்மாகாண விளையாட்டுத் திணைக்களப்பணிப்பாளர் பா.முகுந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-7,9)

## வாகன விபத்து நால்வர் படுகாயம்

(கொழும்பு)

மீரிகம கலேலியா பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர். பாரவூர்தி, 08 முச்சக்கர வண்டிகள், கார் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியன விபத்துக்குள்ளாகியுள்ளன.

குறித்த பாரவூர்தியின் பிரேக்கில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு காரணமாக வீதியில் நிறுத்தப்பட்டிருந்த கார், 08 முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றுடனும் மோதி விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் நான்கு பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

## குளத்திலிருந்து வயோதிபப் பெண் சடலமாக மீட்பு

தனிமையில் வாழ்ந்த வயோதிபப் பெண்ணொருவர் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குளியாப்பிட்டி பிரதேசத்திலுள்ள குளத்தில் இருந்தே குறித்த பெண் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதே பிரதேசத்தில் வசித்து வந்த 71 வயதுடைய பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். உயிரிழந்த பெண்ணின் கணவர் (வயது 73) கடந்த மாதம் வீட்டில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்தார் என்றும், அதன்பின்னர் குறித்த பெண் வீட்டில் தனிமையில் வசித்து வந்தார் என்றும் பொலிஸாரின் மேலதிக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7,9)

## இரத்தக் காயங்களுடன் இளைஞன் சடலமாக மீட்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் இரத்தக் காயங்களுடன் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிஸார் சடலத்தினை நீர்கொழும்பு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 125

# மல்யுத்த வீரனின் யுத்தி



ஒரு ஊரில் குத்துச் சண்டை போட்டியில் பயில்வான் ஆக இருந்த வீரரை அந்தப் பகுதியில் அவரை வெல்ல யாருமே இல்லை. இதனால் அவருடன் போட்டியிட யாருமே முன்வருவதில்லை. அவருடைய எதிரிகள் எவ்வளவோ விதங்களில் முயற்சி செய்தும் கூட அவரை வீழ்த்த முடியவில்லை.

குடிப்பழக்கம் போன்ற கெட்ட பழக்கங்களை அவருக்கு அறிமுகப்படுத்தலாம் என்று முயற்சி செய்து அயல் நாட்டு போதைவஸ்துக்களை அவருக்குப் பரிசளிக்க முயன்ற போது அவர்களுக்கு முன்பாகவே அவர் அதை உடைத்து நொறுக்கி அவர்களை அவமானப்படுத்தி அனுப்பினார்.

இறுதியாக ஒரு முடிவெடுத்தார்கள். எதையாவது செய்து அவரைப் போட்டியில் வீழ்த்த வேண்டும் என பயில்வானை வீழ்த்துபவருக்கு 10 இலட்சம் பரிசு கொடுப்பதாக அறிவித்தார்கள். இந்தச் செய்தி காட்டுத்தீ போலப் பரவியது. இது புதிதாய் சண்டைப் பயிற்சி செய்து வரும் ஒரு இளைஞனின் காதிலும் விழுந்தது.

10 இலட்சம் பரிசுத் தொகையாக அறிவிக்கப்பட்டாலும் அந்த வீரரின் வலிமை தெரிந்திருந்ததால் போட்டிக்கு வர யாருமே முன்வரவில்லை. இந்த நிலையில் அந்தப் புதிய இளைஞன், தான் போட்டிக்கு வருவதாக முன்வந்தான். பலரும் அவனை பயமுறுத்தி அவரிடம் மோத வேண்டாம் என்று அறிவுரை கூறினார்கள்.

அவனோ தன் முடிவில் உறுதியாக இருந்தான். குறித்த பயில்வானும் அவனுடன் சண்டையிட சம்மதித்து விட்டார். போட்டியின் நாள் அறிவிக்கப்பட்டது. புதிய இளைஞன் தன்னுடைய நெருக்கமான நண்பர்களை வரவழைத்து அவர்களிடம் தனக்காக உதவி செய்யும்படி சில விடயங்களைக் கூறினான்.

அந்த இளைஞனின் நண்பன் ஒருவன் வீட்டுக்குப் பழங்களுடன் போய் அவர் போட்டியில் வெற்றி பெற வாழ்த்துகள் சொல்லிவிட்டு திடீரென்று , "என்னய்யா ஆச்சு உங்களுக்கு? . பேசும் போதே இப்படி மூச்சு வாங்குதே. கல்லு மாதிரி இருந்தீங்களே! உடம்பைப் பாத்துக்குங்க " என்று சொல்லிச் சென்றான்.

"எனக்கு மூச்சு வாங்குதா? நான் நல்லாதானே பேசுறேன்? ". அவருக்குக் குழப்பம் வந்துவிட்டது. மறுநாள் அதிகாலை, அவர் வீதியில் ஓட்டப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது திட்டப்படி இன்னொரு இளைஞன் அவருக்கு எதிரே வந்து "ஐயா, போட்டியில கலந்துக்கப் போறதா கேள்விப்பட்டேன். நான் உங்க தீவிர ரசிகன். இப்பவும் நீங்க தான் ஜெயிக்கப் போறீங்க. அதுல சந்தேகமே இல்லை. ஆனாலும் முன்னால உங்க ஓட்டத்துல இருந்த வேகமும் வலிமையும் இப்ப இல்லையே? உடம்பு சரியில்லையா?" என்று கேட்டு விட்டு நகர்ந்தான்.

"என்ன எல்லாரும் இப்படி கேக்குறாங்க?" இப்போது சிறிதாய் பயம் துளிர்விட்டது. போட்டி துவங்கும் நேரம் வந்தது. பலரும் வந்து அவருக்கு வாழ்த்துச் சொல்லி உற்சாகப்படுத்தினர். அவர் மேடையேறப் போகும் போது எதிராளியான இளைஞனின் நண்பனான மற்றொரு இளைஞன் கையில் பூங்கொத்துடன் வந்து அவரை வாழ்த்திக் கைகுலுக்கினான்.

"என்னய்யா , எப்பவும் உங்க பிடி இரும்பு மாதிரி இருக்கும் இப்ப ரொம்பவும் தளர்ந்து போச்சே என்னாச்சு உங்களுக்கு?" என்று கேட்டுவிட்டு விடைபெற்றான் .

அவ்வளவுதான் வீரர் முற்றிலுமாக சோர்ந்து போனார். போட்டி துவங்கியது. அவர் வேகமாய்த் தாக்குதலை ஆரம்பித்தாலும் இனம்புரியாத சோர்வினால் இளைஞனின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் பலவீனமாய் சரிந்தார்.

எல்லாரும் ஓடி வந்து இளைஞனின் சாதனையையும் வீரத்தையும் பாராட்டினார்கள். அவனோ நன்றிப் புன்னகையோடு தன் நண்பர்களின் முகத்தை பார்த்தான் பலருடைய வாழ்வில், வந்துவிட்ட வியாதியைவிட வந்துவிடுமோ என்று எண்ணி பயப்படுகிற வியாதியே பலரை கீழே தள்ளி வீழ்த்தி விடுகிறது.

# உணவில் பூரான்

## விரைந்து நடவடிக்கை எடுத்த சுகாதார துறை



(மன்னார்)

மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக் குட்பட்ட பேசாலை கிராமத்தில் உள்ள உணவகம் ஒன்றில் நபர் ஒருவர் நேற்று முன்தினம் காலை வாங்கிய உணவில் பூரான் காணப்பட்டுள்ள நிலையில் குறித்த விடயம் தொடர்பாக சுகாதார துறை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

விரைந்து செயற்பட்ட மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை பொது சுகாதார பரிசோதகர்கள் கிடைக்கப்பெற்ற உணவு தொடர்பான முறைப்பாட்டையடுத்து சுகாதார மருத்துவ அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக குறித்த உணவகத்துக்குச் சென்று உணவுகள் அனைத்தும் அழிக்கப்பட்டதுடன் கடை உரிமையாளர் கடுமையாக எச்சரிக்கப்பட்டு சமையலறையை உடனடியாக திருத்தி அமைப்பதற்குரிய வழிகாட்டலும் மேற்கொள்ளப்பட்டது. (நி-285)

# ராஜிதவின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்யுமாறு கோரிக்கை

(கொழும்பு)

ராஜித சேனாரத்னவின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்யுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலர் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ராஜித சேனாரத்ன தொடர்ந்தும் கட்சியின் தீர்மானங்களுக்கு முரணான கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையில் அவர்கள் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

அத்தோடு அவரது செயற்பாடுகள் கட்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவரிடம் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இது தொடர்பாக கட்சித் தலைமை இன்னும் எந்த முடிவையும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)




மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை காலை பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

(படம்:-ஜோசப்நயன்)

# சுற்றுலாத்துறையின் மூலம் மார்ச் மாதத்தில் 200 மில்லியன் டொலர் வருவாய்

(கொழும்பு)

சுற்றுலாத்துறையின் மூலம் மார்ச் மாதத்தில் 200 மில்லியன் டொலர் வருவாய் கிடைத்துள்ள நிலையில் இந்த காலாண்டில் மட்டும் 500 மில்லியன் டொலர் வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதத்தில் 198.1 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது என்றும் இது முந்தைய ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடுகையில்,22 சதவீத அதிகரிப்பு என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், தேசியப் பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறையின் பங்களிப்பு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளது.

2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், வருவாய் 9.8 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

பொருளாதாரத்தில் நிலவும் சவால்களை எதிர்கொண்ட போதிலும், இலங்கையின் சுற்றுலாத் துறையானது சுற்றுலாப் பயணிகளின் வருகையில் நிலையான முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றது. (நி)

# இலங்கைப் பணியாளர்களுக்கு ஜப்பானில் அதிக வேலைவாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் புலம் பெயர் பணியாளர்களுக்காக ஜப்பானில் அதிக தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த தொழில் வாய்ப்புகளுக்காக முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த தொழில் வாய்ப்புகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு ஜப்பான் மொழிக் கற்கைகள் குறித்தும், இதன்போது கவனம் செலுத்தப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சாவுடன்...

28 வயதுடைய பெண்ணொருவர் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து 157 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,104)

## பள்ளிவாசலில்...

கிராமம் - 2 பகுதியில் அமைந்துள்ள மஜ்ஜிதுல் முனீர் பள்ளிவாசல் முன்றலில் இடம்பெற்றிருந்தது.

சம்மாந்துறை பிரதேச எல்லைக்கு உட்பட்ட பள்ளிவாசல்களுக்கு புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதற்காக நிர்வாக தெரிவுக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது குறித்த கூட்டத்தில் பங்குபற்றியவர்களில் சிலர் எதிர்வரும் நோன்பு பெருநாள் முடிந்தவுடன் நிர்வாகத்தை தெரிவு செய்யுமாறு கோரியதுடன், மற்றுமொரு குழுவினர் சில தினங்களில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட வேண்டுமென தெரிவித்திருந்தனர்.

கூட்டத்தை நிறைவு செய்து திரும்பியவர்கள் இரு குழுக்களாக பிரிந்து மோதலில் ஈடுபட்டதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (ம-7,9)

## சீனாவின்...

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம் பெற்றது.

இதன்போது தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களை சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

சீனா மற்றும் இலங்கைக்கிடையிலான பாரம்பரிய நட்பை வலுப்படுத்தல் மற்றும் பல்வேறு துறைசார் பரிமாற்றங்கள் குறித்து சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் பயங்கரவாத செயற்பாடுகள், போருக்குப் பின்னரான மறுசீரமைப்பு, கோவிட்-19 தொற்று நோய்க்கு எதிரான போராட்டம் போன்ற அனைத்து முக்கியமான தருணங்களிலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவும் இலங்கைக்கு மிகவும் மதிப்புமிக்க உதவிகளைத் தொடர்ந்து வழங்கியதற்காக சீன அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்த சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான பாரம்பரிய நட்பை ஆழமாக்குதல், பல்வேறு துறைகளில் பரிமாற்றங்கள், ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் பொதுவான நலன்கள் தொடர்பான மற்ற விடயங்கள் குறித்தும் பரந்தளவில் கருத்து பரிமாற்றங்கள் இடம்பெற்றதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ம-7,9)

## நாடு எழுச்சி...

துள்ளார்.

நாடு கடந்த வருடம் போராட்டங்கள் காரணமாக பாரிய சரிவை சந்தித்திருந்தது.

காலிமுகத்திடல் போராட்டம், வலுவடைந்த பின்னர் ஜனாதிபதி செயலகத்தின் கதவு அருகிலும் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. தற்போது அந்த நிலைமை இல்லை.

இந்தநிலையில், நாடு பொருளாதார ரீதியாக எழுச்சி பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.(ம-7,9)

## சைவத்துக்கு...

இருக்கின்ற சர்வ மதக்குழுவிலிருந்து சைவ சமய குருமார்கள், சைவத் தமிழ் பிரதிநிதிகள் அனைவரும் உடனடியாக வெளியேற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## தமிழர் தேசத்தில்...

நயினாதீவில் நாகபூசணி அம்மன் கோவிலும் மற்றும் நாகவிகாரையும் அமைந்துள்ளது.

இதற்கு ஒரே படகுச் சேவை குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்குச் செல்லும்போது இங்கு இரண்டு விதமான இன பக்தர்களும் சுற்றுலாப் பயணிகளும் பயணிப்பார்கள்.

ஆனால், தமிழிலே நயினாதீவு என்பதுதான் தொடக்கத்தில் இருந்து பாவனையில் உள்ள பெயர். அப்படி இருக்கும்போது தற்போது "நாகதீபய என்று மட்டும் எழுதப்பட்டுள்ள பயண கட்டணச் சீட்டு [illegible] மிகப் பெரிய [illegible] அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

தற்போது இப் பயணக் கட்டணச் சீட்டு சமூக வலைத்தளங்களில் அதிகளவு பகிரப்பட்டு வருகின்றது.

அண்மைக் காலங்களில் தமிழர் பகுதியை சிங்களவர்கள் ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் அதிகரித்து வரும் நிலையில் இச்சம்பவமும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் அமைச்சர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7,9)

## அல்வாயில்...

ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,9)

## தமிழின அழிப்...

வவுனியாவில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் புதிய மாக்ஸிஸ லெனினிச கட்சி என்பனவும் கலந்துகொள்ளவுள்ளன.

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள், காணி ஆக்கிரமிப்புக்கள், தமிழர் பாரம்பரியங்களை அழிக்கும் செயற்பாடுகள் உட்பட அரசியல் தீர்வு விடயங்களில் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான கட்டமைப்பாக இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (ம-7,9)

## எதை...

முரசுமோட்டை வட்டார கிளையின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முரசுமோட்டை முருகன் கோவில் முன்றலில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய நாட்டின் ஜனாதிபதி சொல்லுகின்றார் யாரும் விக்கிரகங்களை வலுக்கட்டாயமாக வைக்க முடியாது என்று.

இவ்வாறு கூறுகின்ற ஜனாதிபதி ஏற்கெனவே பாரம்பரியமாக வழிபட்டு வந்த விக்கிரகங்களை உடைப்பதற்கான அனுமதிகளை கொடுக்கின்றார் குறிப்பாக குறுந்தூர் மலையிலே நீதிமன்றம் போட்ட கட்டளையை மீறி விகாரை அமைக்கப்படுகின்றது

வெடுக்குநாறி மலையிலே விக்கிரகங்கள் உடைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழர் வழிபாட்டிடங்களில் விகாரை அமைப்பதற்கு அவர் அனுமதித்துள்ளார்.

சிங்கள பௌத்த பேரினவாதம் எதைச் செய்தாலும் அவர் மௌனமாக இருப்பார் ஆனால் தமிழர்கள் எதையும் போய் செய்யக்கூடாது என்றும் அவ்வாறு செய்தால் அது வலுக்கட்டாயம் என்றும் தடுத்து வருகின்றனர்

இவ்வாறான ஒரு நெருக்கடிக்குள் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் எங்களுக்கான சுயாட்சியை நிறுவுவதற்காக நீண்ட நெடுங்காலமாக போராடி வருகின்றோம். அதற்காக பல்லாயிரக்கணக்கான உயிர்களை விலையாக கொடுத்திருக்கின்றோம். பலரை இழந்திருக்கின்றோம். பெறுமதி மதிப்பிட முடியாத சொத்துக்களை இழந்திருக்கின்றோம்

இதையெல்லாம் கடந்தும் இந்த மண்ணில் எமக்கான விடுதலை நோக்கிய பயணத்தில் ஒன்று சேர வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். (ம-7,9,315)

### ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1539
மிதுனம் 7 6 2 5 5 1

### தன நிதானய
திகதி - 2023.04.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1114
A 10 22 27 57

### கொவிசெத
திகதி 2023.04.08
சீட்டிழுப்பு இலக்கம் 3326
C 23 35 53 78

### மெகா பவர்
திகதி 08/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1432
D 01 11 19 30 40

### ஹந்தஹன
சீட்டிழுப்பு திகதி 2023.04.08
சீட்டிழுப்பு இலக்கம் 393
துலாம் 15 27 47 48 துலாம்

### மஹஜன சம்பத
திகதி 2023/04/08
சீட்டிழுப்பு இலக்கம் 5084
Z 7 2 5 8 6 6

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2059
சீட்டிழுப்பு திகதி 2023.04.08
நிறம் கடும் நீலம்
தினம் சனிக்கிழமை
N 07 12 17 53
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,716,000/-

### சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.08
சீட்டிழுப்பு இல : 4220
வர்ணம் : இளம் பச்சை
ரூ. 5,328,440/-
11 25 26 62 G

### ராசி
ரூ. 2,785,362.40
திகதி 2023-04-08
வெற்றி வாரம் 3771
வர்ணம் இள நீலம்
02 37 42 62
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,896,002.40

### லக்ன வாசனா / கப்ருக
A 39 05 06 26 30
சீட்டிழுப்பு வாரம் 1235
சிவப்பு
திகதி 2023.04.08 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 320,195,738.20

### சம்பத வாசனா
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 586
திகதி 2023-04-08
வர்ணம் செம்மஞ்சள்
O 25 30 53 05
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 18,930,580/-

### அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1885
சீட்டிழுப்பு திகதி : 2023.04.08
ரூ. 5,501,060/-
05 22 29 41 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம் :**
**காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை**
**• தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15194)

**077 814 7389, 077 986 5457**

# காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (15165)

**076 342 4705**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி வழிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 02 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- ⇨ A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி
- ⇨ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ⇨ கைதடி சந்தியிலிருந்து 500m தூரம்
- ⇨ A9 வீதியிலிருந்து 50m தூரத்தில் காணி உள்ளது.

(15183)

**076 739 0413, 076 436 5814**

# சென்னை வெற்றி



ஐபிஎல் ரி20 கிரிக்கெட் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் சென்னை அணி அபார வெற்றி பெற்றது.

முதலில் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி 158 ரன்களை சென்னை அணிக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

பின்னர் களமிறங்கிய சென்னை அணி 18.1 ஓவர்களில் 159 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 1 பரப்பின் விலை
  காப்பெற் வீதியை பிரதான முகப்பாகக் கொண்ட காணிகள் 15 இலட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- **பார்வையிடும் நேரம் :**
  காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15194)

**077 814 7389, 077 986 5457**

# காணி விற்பனைக்கு

பனிக்கர்நீராவி புளியங்குளம் A9 வீதிக்கு அருகாமையில் இரண்டு ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு. (எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் களஞ்சியசாலை அமைப்பதற்கு உகந்தது. (15105)

**077 735 4470**

**CCTV கமராக்கள் பொருத்துதல், பழுது பார்த்தல், பராமரிப்பு வேலைகள் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.** (15191)

**V Vision Security solutions**

**077 998 6772**

# A/L PHYSICS

சடமும் கதிர்ப்பும், Past paper அலகு ரீதியான Seminar ஆரம்பமாகவுள்ளது.

இடம் : வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரிக்கு அருகே Y.M.A.C.A (தும்பசிட்டி) (15157)

**077 600 4896**

Estb - 2019

# கனி மெடிக்கல்ஸ் கைதடி

(சித்த போதனா வைத்தியசாலை முன்பாக)

அனைத்து விதமான சித்த ஆயுர்வேத மருந்துகளையும் மூலிகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (15153)

**4 ஆம் வருட நிறைவை முன்னிட்டு ஏப்ரல் 10 முதல் 31 வரை 10% வரையிலான விலைக்கழிவு!**

**வைத்தியர்களுக்கு விஷேட விலைக்கழிவு வழங்கப்படும்.**

தொடர்புகளுக்கு :

**077 438 2374, 077 926 8850**

நாடு முழுவதும் குறைந்த கட்டணத்தில் விநியோகிக்கப்படும்.

# பணி வெற்றிடங்கள்

- ◆ ரொட்டி, சிற்றுண்டி தயாரிப்பாளர்
- ◆ சமையல் உதவியாளர்
- ◆ பண்ணை பராமரிப்பாளர்
- ◆ பரிமாறுபவர்

(15132)

- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வேலை செய்யக்கூடிய முதியவரும் அனுமதிக்கப்படலாம்.

தொடர்புகளுக்கு:-

**074 070 5066, 077 711 0329**
**077 229 9944**

வாருங்கோ விருந்தகம்
A9 வீதி முகமாலை, பளை.

# வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல கட்டுமான நிறுவனத்திற்கு மேசன், கூலித்தொழிலாளிகள் தேவை (15174)

**077 227 1217**
**077 756 9686**

# உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்**

**V2 TRAVELS**

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6325)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-

**0777-068-777**
v2vacancies@gmail.com

# காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் (நிலப்பரப்பு) 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பரப்பின் விலை (125,000/=) ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து 1½ km தூரம்.
- புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி

(15183)

**076 755 8606**
**077 638 5683**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 48 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15183)

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**

# உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6325)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.